உலகப் புகழ்பெற்ற இலங்கை விஞ்ஞானியான பேராசிரியர் சிறில் பொன்னம்பெரும பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல ஆகியோர் வித்யா ஜோதி மற்றும் தேசமான்ய கௌரவப் பட்டங்களைப் பெறும் முக்கியஸ்தர்களாவர்— சிங்கள நாடகக் கலைஞரான சரத்சந்திர எதிரிவீர கலாசூரி கௌரவத்தை பெறுகிறார்— [த—032]

# வருங்கால...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது உணர்ந்துள்ளோம்!

சென்ற ஆண்டில் பல சோதனைகளும் சவால்களும் எம்மை எதிர்நோக்கின— தேசிய இனம் என்ற வகையில் பல சவால்களை மிகுந்த மன உறுதியுடன் சமாளித்துக் கொண்ட பெருமை எங்களுக்கு உண்டு—

வன்முறைகள் வன்முறைகளை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பதை இப்பொழுது உணர்ந்துள்ளோம— அச்சுறுத்தலைக் கொண்டு ஜனநாயகத்தை அழிக்க முடியாது என்பதையும இப்பொழுது உணர்ந்துள்ளோம.

நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும மீண்டும் உருவாகி வருகின்றன— அரசாங்கத்தில் மக்கள் வைத்துள்ள நமபிக்கை வலுப்பெற்று வருகின்றது— பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன—

நல்ல வருங்காலம் உண்டென்ற விசுவாசம ஏற்பட்டுள்ளது— எதிரேயுள்ள ஆண்டில் நாட்டை உறுதி நிலைக்குக் கொணரவும மீளமைப்பு செய்யவும வேண்டியதாகும— நாங்கள் நமது நாட்டை மீண்டும கட்டி எழுப்ப வேண்டும— நாம் அடையும் நன்மை அனைவருக்கும சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும—

முக்கியமாக நாங்கள் புத்துயிர் கொண்டெழ வேண்டும— சமாதானத்தையும முன்னேற்றத்தினையும் பேணுவதற்கு அயராது நாங்கள் உழைத்தல் வேண்டும— இவைகளை சாதிப்பதற்கு தனிப்பட்டவர்கள் இனங்கள் என்ற முறையில் இலங்கையர்கள் ஒவ்வொருவரும செயலார்வம் கொள்ளல் வேண்டும—

இச் சுதந்திர தின விழாவிலே புதிய தசாப்தம ஒன்று உதயமாகும இந்த நேரத்திலே நாங்கள் அனைவரும ஒற்றுமையோடு முன்செல்லுவோமாக இலங்கையர்கள் மிகுந்த பண்பாளர்களாவும் திறமைசாலிகளாகவும் விளங்குகிறார்கள்—

நமது பாரமபரிய உரிமைகளைப் பேணிக் காப்பதற்கு நம் மக்களது சிறப்பாற்றல்களையும விழுமிய பண்புகளையும பயன்படுத்திக் கொள்வோமாக— அதன் வாயிலாகத்தான் நம நாட்டுக்குப் பல தியாகங்களைச் செய்த நமது பண்டைய விடுதலை வீரர்களின் வாரிசுகளாக நாம திகழ முடியும்—

அதன் வாயிலாகத்தான் அண்மைக்கால வரலாற்றில் நமது தாய் நாட்டையும் ஜனநாயகத்தையும் ஒற்றுமையினையும் பாதுகாத்த திரமிக்க தேசாபிமானிகளுக்கு மரியாதை செலுத்த முடியும்—

எமது சரித்திரம எம்மைப் பெரிதும் உற்சாகப்படுத்துகிறது— எமது உற்சாகம எங்களை உயிர் வாழச் செய்கிறது— ஒற்றுமை சமாதானம் சுபீட்சம ஆகியவற்றில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நமது வருங்கால நோக்கு அமையும்—

அது இலங்கையர் அனைவருக்கும உரிய நோக்காகும— அது விசேடமாக எமது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் எங்கள் இளைஞர்களுக்குரிய நோக்காகும—

இச் சிறப்புமிக்க நாளிலே எமது தாய் நாட்டுக்கும் இலங்கையர்கள் அனைவருக்கும மும்மணிகளின் அருள் கிட்டுவதாக வெனக் கூறி உங்களை வாழ்த்துகிறேன்—

இப்படி ஜனாதிபதி தமது சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்—

[ண]

## "பாசமலர்" வெளியீட்டு விழா

கொழும்பு, பெப் 3

தர்கா நகர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் "பாசமலர்" புத்தக வெளியீட்டு விழாவும, இலக்கிய கருத்தரங்கு ஒன்றும இன்று பிற்பகல் நடைபெறவுள்ளன.

ஜாமியா நளீமியாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் ஷைருல் பஷீர் தலைமையில் இவ்விழா நடைபெறும.

(த—007)

...செய்தியில் தெரிவித்துள்ளார்.

(த—032)

## மௌலவி

கொழும்பு, பெப் 3

எல்லா இன மக்களும அன்பு, சமாதானம மற்றும சமத்துவத்துடன் வாழ்ந்த பண்டைய இலங்கையின் பெரு

## தேசிய தின சமய நிகழ்ச்சி

கொழும்பு, பெப் 3

முஸ்லிம சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம மாளிகாவத்தை ஜும்மஆ பள்ளிவாசலில் தேசிய தின சமய நிகழ்ச்சிகளை இன்று நடத்தும.

இந்நிகழ்ச்சி இன்று காலை 6—30 மணிக்கு மாளிகாவத்தை ஜும்மஆ பள்ளிவாசலில் முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஜாபிர் ஏ காதர் தலைமையில் நடைபெறும.

(த—007)

## இலவச கண்ணாடிகள் வழங்கப்படும்

கொழும்பு, பெப் 3

தேசிய தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இன்று 400 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் விநியோகிக்கப்படும.

பத்தரமுல்லையில் உள்ள வீடமைப்பு, நிர்மாண அமைச்சில் இந்த வைபவம நடைபெறும.

இங்கு இன்று முழு நாளும கண் சிகிச்சை முகாமும நடத்தப்படும.

அகில இலங்கை பௌத்த சங்கமும, கொழும்பு மாநகர சபையும, கொழும்பு லயன்ஸ் கழகமும இதனை ஏற்பாடு செய்துள்ளன

(த—007)

## இன்று உணவை தியாகம் செய்யும் கைதிகள்

கொழும்பு, பெப் 3

இன்று வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் தமது உணவைத் தியாகம செய்வர்.

இந்தச் செயலால் மீதியாகும 25,000 ரூபா பணம நோயுற்ற ஒரு குழந்தையின் மருத்துவ சிகிச்சைக்காக அன்பளிப்பு செய்யப்படும.

(த—007)




பூ...

பூவா பூத்திருக்கு

(கலர்)



## 9 ஆவது வாரம்!

முருகன்

(ஜிந்துப்பிட்டி)

கடைசி சில தினங்கள்

-15 6-00 9-15 சனி/ஞாயிறு 10-15

கிறவுடா

(பேருவளை)

இன்று மட்டும

10-30 2-30 6-00

வெலிங்டன்

(யாழ்நகர்)

10-30, 2-30, 6-00

ஒளிப்பதிவு வெகு ஜோர்— "பழமுதிர்ச்சோலை" "பொங்கலு" "கண்மணியே" ஆகிய மூன்று பாடல்களும் முக்கனிகள், ஜீவனுள்ள உச்சக்கட்டம் கருத்தாழமிக்க வசனம்—

கார்த்திக்— குஷ்பு நடித்த



## வருஷம்—16

(கலர்)

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி



ரஜனீஸ்

எல் ஸ்ரீஸ்கந்தராஜா,
கொழும்பு 13.

கே— அண்மையில் காலமான செக்ஸ் சாமியார் ரஜனீஷைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப— பலருக்கு இன்பம் தேடிக் கொடுத்த சாமியார், முடிவில் தாமே துன்பக் கடலில் விழ வேண்டியவர் ஆனார். நூற்றுக்கும் அதிகமான புதிய புதிய "ரோல்ஸ்ரோய்" கார்களில் பவனி வந்தவரின் வாழ்க்கை ஈற்றில் பாடை பவனியுடன்தான் முடிய வேண்டியதாயிற்று. ஆயினும் அவருடைய பேச்சும், பிரசங்கமும், தத்துவங்களும், புரட்சியும் புதுமையும் ஜீவனும் உள்ளவையாக விளங்கின. ரஜனீஷின் கண்கள் படுகவர்ச்சியானவை. அவற்றின் காந்தத்தில் மயங்கிய சிட்டுக்கள் அநேகம்.

★

நல்லையா ரவிகாந்தன்,
நமுனுகுல.

கே— புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கும் ஒருவனுக்கு நீங்கள் கூறுவது என்ன?

ப— ஆரம்பத்தில் இருந்தே கடன் கொடுக்கும் வழக்கத்தை வைத்துக் கொள்ளாதீர்கள் என்பது தான்.

★

எஸ் இராமநாதன்,
நிலாவெளி.

கே— இந்தியப் பிரதமர் வி பி சிங் தமது பதவியில் நிலைத்து நிற்பாரா?

ப— ஆட்சிக் கலையில் ராஜீவை விட அனுபவம் பெற்றவர் சிங். அவர் சீக்கிரம் சரிந்து விடுவார் என்று சிலர் மனப்பால் குடிக்கிறார்கள். இது நடப்பது சாத்தியமல்ல.

★

செல்வி ஏ எச் என் நஸீரா,
கஹகொல்ல.

கே— ஒருவரை நல்லவரா, கேட்டவரா என்று பார்த்து உறுதிப்படுத்துவதற்கு என்ன பரிசோதனை நடத்தலாம்?

ப— அவர் தூங்கும் போது முகத்தைப் பாருங்கள்! நல்லவராயிருந்தால் முகம் சாந்தமாக இருக்கும்! அல்லவராயிருந்தால் முகம் அகோரமாய் இருக்கும்! கம்பனே இந்த உண்மையை ஒரு கவிதையில் சொல்லியிருக்கிறான்!

★

செ குமாரவேல்,
போகவந்தலாவ.

கே— வாழ்வில் கஷ்டமான நிலைமை வரும் போது எல்லாம் "விதி" என்று ஆறுதல் சொல்கிறார்களே — இது சரியா?

ப— அதைத் தவிர ஆறுதல் அடைவதற்கு வேறு வழி இல்லையே.

★

எஸ் எம் சித்திக்,
கல்முனை.

கே— பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இரண்டாவது குழந்தையைப் பெற்றிருக்கிறாரே...?

ப— ஆளுவதில் மட்டுமல்ல, வாழுவதிலும் அவர் வீராங்கனை என்று தெரிகிறது.

★

எம் எஸ் ஹமீதா,
பொதுஹர.

கே— மனிதன் ஏன் நீண்ட நாட்கள் உயிர் வாழ்வதில்லை?

ப— நீண்ட நாட்கள் வாழ்கிறானே. 1920 ஆம் ஆண்டில் சராசரி 42 ஆண்டுகள் வரை வாழ்ந்த மனிதன் 1981 ஆம் ஆண்டில் சராசரி 72 வயது வரை வாழ்கிறான் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றனவே. இவ்வளவு நீண்ட காலம் வாழ்வது போதாதா?

★

குவைதா ஆதம்,
மிரிஹம்பிடிய.

கே— ஒரு மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு என்னென்ன விசயங்கள் சரியாக அமைய வேண்டும்?

ப— ஒரு விஷயம் சரியாக அமைந்தாலே போதும். அதாவது, அவனை எதிலும் ஆசை என்ற பேய் பற்றிப் பிடிக்காதிருக்க வேண்டும்.



பெனாஸிர் பூட்டோ

★

ஆர் ஆர் வரன்,
சாமிமலை.

கே— வாழ்க்கையில் பிரச்சினை வரலாம். ஆனால் வாழ்க்கையே பிரச்சினையானால் என்ன செய்வது?

ப— அதையும் மேற்கொண்டு வாழ முயற்சிப்பது.

★

எம் அன்ஸார்,
மீயல்லை.

கே— உங்களை பல அழகிகள் ஏக காலத்தில் முத்தமிட்டால் என்ன செய்வீர்கள்?

ப— ஐயோடா! ஒரு அழகியையே தாங்க முடியவில்லையே.

★



வி பி சிங்

எம் என் எம் நதீம்,
மடவளை பஸார்.

கே— இவ் வையகத்தில் எவ்வாறு வாழ வேண்டும்?

ப— பிறர் பார்த்து வியக்கும்படி வாழ வேண்டும். அதுவும் உழைத்து வாழ வேண்டும்.

★

செல்வி நூரியா ரஷீத்,
திக்குவல்லை.

கே— இஸ்லாம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் தயங்காமல் சாமர்த்தியமாகப் பதில் கூறுகிறீர்களே! இதிலிருந்து புரிகிறது "திரிஞானி" என்ற புனைப் பெயரில் உலாவும் நீர் ஒரு "முஸ்லிம்" என்று!

ப— சரியானவற்றை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்கிறீர்கள்!

★

றமீஸ் பர்ஸானா,
புத்தளம்.

கே— இரவு என்று ஒன்று இல்லாமல் இருந்தால் எப்படி இருக்கும்?

ப— எப்போதோ பாதி உலகம் பாலைவனமாகி இருக்கும்!

★

எம் பிஃருள் ஹுதா,
எம் பௌஃசுன் நதா,
காலி—

கே— மீனை விரும்பாத பூனையையும் ஆண்களை விரும்பாத பெண்களையும் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப— மீனை விரும்பாத பூனை இருக்கலாம்! ஆனால் ஆணை அணைக்க விரும்பாத பெண் இருக்க முடியாது!

★

கே கீதா,
கே பிரமிளா,
பள்ளேபொல.

கே— நீர் மிக விரும்பும் பூ எது?

ப— சிரிப் — பூ.

★

செல்வி வீ பிரமிளா,
மாத்தளை.

கே— ஆணின் கோபம் — பெண்ணின் கோபம் இரண்டிலும் எது வலிமையானது?

ப— நிச்சயமாகப் பெண்ணின் கோபம் தான்!


★

செல்வி மைதிலி லெச்சுமன்,
கரண்டிஎல்லை.

கே— பெற்றெடுத்த குழந்தையை வளர்ப்பதற்கும் தத்தெடுத்த குழந்தையை வளர்ப்பதற்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப— ஒன்று தாய்ப்பாலில் வளரும்! மற்றது மாப்பாலில் வளரும்!

# நட்பை வளர்ப்போம்



# நட்பை வளர்ப்போம்




# பிறிஸ்டல்

## சுவையைப் பகிர்ந்துகொள்வோம்

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடிப்பதால், உங்கள் சுவாசப்பைகளுக்குத் தீங்கு விளையக்கூடும்

விலை
10 கொண்டது — ரு 17/-
20 கொண்டது — ரு 34/-

# காஷ்மீர்: யுத்தவிளிம்பில் பாக். பாரதம்

விரல்கள் அசையாமல் ஊதும் குழல்கள் இசை தரா— சுவர்க்கபுரி என்று வர்ணிக்கப்படும் காஷ்மீரின் இன்றைய விவகாரங்கள் இப்படித்தான் சொல்ல வைக்கின்றன—

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய மாநிலங்களில் ஒன்றான ஜம்மு — காஷ்மீரில் கலவரங்கள் மூண்டன. வன்முறைகளை அடக்க இந்தியா இராணுவத்தை அனுப்பியது—

வன்முறைத் தீவிரவாதிகளுக்கும் துருப்புக்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதல்களில் 60 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது— உண்மையில் மரணமானவர்களின் எண்ணிக்கை 500 ஐத் தாண்டி விட்டது என்று கிளர்ச்சியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது—

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி காஷ்மீர் பிரிவினைவாத தீவிரவாதிகள் ஒருதலைப்பட்சமாக சுதந்திரத்தை பிரகடனப்படுத்த இருந்தனர்—

## சுதந்திர பிரகடன

## முயற்சி முறியடிப்பு

இந்தியா துருப்புக்களை அனுப்பி ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து இந்த முயற்சியை முறியடித்து விட்டது!

ஜம்மு — காஷ்மீர் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் மாநிலம்— காஷ்மீர் மக்கள் சாந்த சொரூபிகள் இந்திய பெரும்பான்மைச் சமூகத்தவர்களான



குஜ்ரால்

டுக் கட்சிதான் 1939 மே 30 இல் அதன் மதவாத பெயரை கைவிட்டு தேசிய மாநாட்டுக் கட்சியாக உருமாறியது—

சுமார் 10 வருட காலம் மாநிலத்தில் ஆட்சி நடத்திய இந்தக் கட்சி 1987 இல் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி நடத்தியது—

## தேர்தல்களில்

## தில்லுமுல்லு

இதன் பிரதான எதிர்க்கட்சியான முஸ்லிம் ஐக்கிய முன்னணியை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்பதில் தேர்தலில் தில்லுமுல்லுகள் திருகுதாளங்கள் தாராளமாக இடம்பெற்றன என்று குற்றம் சாட்டப்படுகிறது—

இதனால் அதிருப்தியுற்ற முஸ்லிம் ஐக்கிய முன்னணி தேர்தல் சாவடி முகவர்களான இளைஞர்கள் பலர் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்கள்— திரும்பி வரும்போது இந்திய எதிர்ப்பு உணர்வோடு வந்தார்கள்!

அவர்கள் காஷ்மீரில் உள்ள சுமார் 20 தீவிரவாதக் குழுக்களில் ஒன்றில் சேர்ந்து இயங்கினார்கள்—

## அல்லாஹ்வின்

## புலிகள்

இந்தக் குழுக்களில் முக்கியமானது "அல்லாஹ்வின் புலிகள்" என்ற இயக்கமாகும்— ஆப்கானிஸ்தானிய கெரில்லாத் தலைவர் குல்புதீன் ஹெக்மத்தியாருக்கு விசுவாசமான இந்தக் குழு காஷ்மீரில் சகல மதுச்சாலைகளையும் சினிமாக் கொட்டகைகளையும் மூடும்படி கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டது— ஹோட்டல்களில் பாகிஸ்தானிய சினிமாப் பட வீடியோ படங்களை மட்டுமே காட்ட வேண்டும் என்று மிரட்டியது—

இந்தியப் பிரதமர் வி பி சிங் நிலைமை கட்டுமீறுவதை தடுக்க மாநிலத்திற்கு ஜகமோகனை ஆளுநராக நியமித்தார்— மாநில முதல்வர் பாரூக் அப்துல்லா பதவியை ராஜினாமாச் செய்தார்—

## இந்தியா — பாகிஸ்தான்

பரஸ்பரம் குற்றச்சாட்டு

3 வித கருத்துகள் நிலவுகின்றன. (1) பிரிவினை, (2) பாகிஸ்தானுடன் இணைப்பு, (3) மாநில தேர்தலை மீண்டும் நடத்துவது.

இந்தியாவும் பாகிஸ்தானும 1947 இல் பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத்தில் இருந்து விடுபட்டு ஆட்சி உரிமை கொண்ட நாடுகளாகப் பரிணமித்தன—

அதன் பின்னர் அவை இரண்டும் 3½ யுத்தங்களை நடத்தியிருக்கின்றன— இவற்றில் இரண்டு யுத்தங்கள் காஷ்மீர் தொடர்பாக நடத்தப்பட்டவை—

காஷ்மீரின் மொத்த நிலப் பரப்பு 84474 சதுர மைல்— 1941 இல் அதன் மொத்த சனத்தொகை 4021616 இதில் 807000 இந்துக்களாவர்—

இந்திய துணைக் கண்டத்திற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது அங்குள்ள சுதேச

## உலக சஞ்சாரம்
## எஸ்.எஸ்.எஸ்

ராஜ்யங்களுக்கு இந்திய சுதந்திர சட்டத்தின் கீழ் பின்வரும முன்னுரிமை வழங்கப்பட்டது—

இந்தச் சட்டத்தின் கீழ் சுதேச ராஜ்யங்கள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ தமது விருப்பப்படி இணைந்து கொள்ள வசதி அளிக்கப்பட்டது—

## காஷ்மீர் மகாராஜா

## இந்தியா பக்கம சாய்வு

அப்போது ஜம்மு — காஷ்மீர் ஆட்சியாளராக மகாராஜா ஹரி சிங் இருந்தார்— அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்—

அவர் ஜம்மு — காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது என்று அறிவித்தார்—

பாகிஸ்தான் ஊடாகவும் இந்தியா ஊடாகவும் போக்குவரத்து வசதிகள் வேண்டும் என்றும் கோரினார் ஜம்முகாஷ்மீர் மக்களின் பெருமபான்மையானவர்கள் முஸ்லிமகள்—

மகாராஜாவின் முடிவை பாகிஸ்தானால் ஜீரணிக்க

## எதிர்ப்பு மத்தியிலும

## காஷ்மீர் சங்கமம

இந்தியா ஐ நா வின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும 1957 ஜனவரி 26 இல் ஜம்மு — காஷ்மீரை தனது மாநிலங்களில் ஒன்றாகச் சங்கமமாக்கிக் கொண்டது—

பூனை தவம செய்வது போலக் கண்ணை மூடிக் கொண்டிருக்கும— அருளுடையது போல அடங்கியும் இருக்கும ஆயினும அதனிடம தவமும இல்லை— அருளும இல்லை—

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும, பாகிஸ்தானும இப்படித் தான் நடந்து கொள்கின்றன என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்து—

கிழக்கு பஞ்சாப்பிலும, காஷ்மீரிலும இருந்து ஊற்றெடுத்துச் செல்லும நதிகள் கால்வாய்கள் தண்ணீர் உரிமைப் பிரச்சினை பாகிஸ்தானுக்கும இந்தியாவுக்கும இடையே நீண்ட காலச் சர்ச்சையாக இருந்து வருகிறது—

கிழக்கு பஞ்சாப் அதன் பிரதேசத்தில் இருக்கும நதிகளின் தண்ணீருக்கு ஏகபோக உரிமை தனக்கே உண்டு என்கிறது— இந்தியாவும இதற்கு பக்கபலமாக இருக்கிறது— இவ்வாறே காஷ்மீரிலுள்ள நதிகளில் இருந்து நேராக பாகிஸ்தானுக்குச் செல்லும ... சர்ச்சை—

## காஷ்மீர் நதிகள்

## முக்கிய பிணக்கு

பாகிஸ்தான் தனது பொருளாதாரம முழுக்க, முழுக்க இந்த நதிகளின் தண்ணீரிலேயே தங்கியிருக்கிறது என்றும சர்வதேசச் சட்டத்தின்படி அதில் தனக்கு உரிமை இருக்கிறது என்று கூறி வருகிறது— தண்ணீரை சமமாகப் பங்கிட வேண்டும என்பது அதன் வாதம—

தென் ஆசியாவில் இந்தியா— குட்டி வல்லரசாகத் திகழ்கிறது— அதற்குப் போட்டியாக பாகிஸ்தான் ... கட்ட முனைகிறது இரு நாடுகளுமே இப் பிராந்தியத்தில் ஆட்சி ... செலுத்த ... போக்கில் செயலாற்றுகின்றன என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள்—

இலங்கை, சிக்கிம, பூட்டான் நேபாளம் ஆகிய நாடுகளுடன் இந்தியா நடந்து கொண்ட விதத்தை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்—

ஆப்கானிஸ்தான் எல்லைக்கும இடைப்பட்ட பிரதேசத்தில் இவர்கள் வாழ்கிறார்கள்— இவர்களில் பெருமபாலானவர்கள் முஸ்லிமகள்—

இந்தச் சமூகத்தவர்களின் இணக்கத்துடன் 1947 இல் இப் பிரதேசம பாகிஸ்தானுடன் சேர்க்கப்பட்டது— பாகிஸ்தானின் அரசியல் அதிகாரத்தால் இப் பிரதேசம நிர்வகிக்கப்பட்டு வந்தது

1955 இல் மேற்கு பாகிஸ்தானில் உள்ள அனைத்து மாநிலங்களையும, மலை சாதி மக்களின் பகுதிகளையும ஒரு நிர்வாகப் பிரிவின் கீழ் பாகிஸ்தான் சங்கமமாக்கிக் கொண்டது

## ஆக்கிரமிப்பு என

## ஆப்கன் எதிர்ப்பு


அப்போதைய ஆப்கானிஸ்தான் பிரதமர் சத்தார் முஹம்மது தாவூத் "இது ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை" என்று கண்டித்தார்—

பக்துனிஸ்தான் சுதந்திர தனி ராஜ்யம ஒன்றை அமைக்க வேண்டும என்று அவர் வற்புறுத்தினார்—


முஸ்லிம நாடான ஆப்கானிஸ்தான் பாகிஸ்தானுக்கு எதிராகக் கொதித்தெழுந்தது— ஆப்கானிஸ்தானில் கொந்தளிப்பு ஏற்பட்டது பாகிஸ்தானியர்கள் பெருமளவில் வெளியேற வேண்டிய அளவுக்கு விவகாரம மோசமாகியது—

பாகிஸ்தானின் பெஷாவர் நகரிலும ஆப்கானிஸ்தானிய தூதரகம தாக்கப்பட்டது— ஆப்கானிஸ்தானில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது—

இரண்டு முஸ்லிம நாடுகளையும சமரசம செய்து வைக்க எகிப்து, ஈராக், சவூதி அரேபியா, துருக்கி ஆகியன முன் வந்



யாகூப் கான்




களும, பிணக்குகளும தற்போது காஷ்மீர் விவகாரமாக பரிணமித்திருக்கின்றன.

ஆற்றின் பள்ளத்தை குளிர் நீரால் அறியலாம. — கள்ளின் வெறியை தடுமாற்றத்தால் அறியலாம. காஷ்மீர் விவகாரத்தில் இப்போது இரண்டு நாடுகளுமே (இந்தியாவும பாகிஸ்தானும) தடுமாற்றம அடைந்திருக்கின்றன.

## தொலைக் காட்சியில்

## யாகூப்கான்

கடந்த 30ஆம திகதி பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் தொலைக்காட்சியில் தோன்றினார்.

நெருக்கடிகளுக்கோ, மிரட்டல்களுக்கோ பாகிஸ்தான் பணிந்து போகாது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும. இப்படி அவர் அறிவித்தார்.

அன்றைய தினம இந்திய இராணுவத் தலைவர் ஜெனரல் விஸ்வநாத் சர்மா எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

## இந்தியத் தளபதி

## எச்சரிக்கை

பாகிஸ்தான் யுத்த நிறுத்த எல்லைக் கோட்டை மீறி எவரை யாவது அனுப்பினால் இந்தியா

## புதுடில்லியில்

## அமெ உதவி அமைச்சர்

கடந்த வாரம இந்தியா வந்திருந்த அமெரிக்க பாதுகாப்பு உதவி அமைச்சர் ஹென்றி ஹோவனை அவர் சந்தித்தார்.

"நாங்கள் அமைதியை விரும்புகிறோம. ஆயினும பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் யாகூப்கானின் தொனியும உள்ளடக்கமும எதிர்மாறாக இருக்கிறது" என்று அவர் முறையிட்டுக் கொண்டார்.

சீனாவுடனான இந்திய உறவு முன்னரைப் போல மோசமானதாக இல்லை. திபெத்திய விவகாரத்தில் சீனாவுக்குச் சாதகமாகவே இந்தியா நடந்து கொண்டிருக்கிறது.

பீகிங்கில் ஜனநாயக உரிமை கோரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை சீன அரசு சுட்டுப் பொசுக்கி அடக்கிய போதிலும் இந்தியா சம்பிரதாயத்திற்கு விசனம தெரிவித்ததுடன் அது உள்நாட்டு விவகாரம என்று கைகழுவி விட்டது.

## சீனத் தூதுவரிடம

## குஜ்ரால் விளக்கம

இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால், புதுடில்லியிலுள்ள சீனத் தூதுவர் கோவெய்யையும சந்தித்தார்.

முயற்சியை முறியடித்து விட்டது!

ஜம்மு — காஷ்மீர் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் மாநிலம்— காஷ்மீர் மக்கள் சாந்த சொரூபிகள் இந்திய பெரும்பான்மைச் சமூகத்தவர்களான



குஜ்ரால்

இந்துக்களுடன் சுமார் 42 வருட காலம் சகஜீவனம் நடத்தியவர்கள்!

அவர்கள் சந்நதம் கொண்டு ஆர்த்தெழுந்திருப்பது இந்தியத் தலைவர்களுக்கு புரியாத புதிராகப் போய் விட்டது—

திருவேற உருவேறும் என்பார்கள்— ஜம்மு — காஷ்மீர் மக்களுக்கு முக்கிய இரண்டு சங்கதிகள் உருவேற்றி இருக்கின்றன—

ஒன்று — பிராந்தியத்தில் பரவி வரும் இஸ்லாமிய தீவிர வாதம்—

இரண்டு — ஊழல் - மோசடிகளினால் எழுந்த அதிருப்தியும் அவநம்பிக்கையும்—

இவை ஜம்மு — காஷ்மீர் மக்களை வீதிவரை விரட்டின— ஊரடங்குச் சட்டத்தை மீற வைத்தன—

## காஷ்மீர் தூர விலக

## காரணம் என்ன?

ஜம்மு — காஷ்மீர் மக்கள் அந்நியப்பட்டு தூர விலகிச் செல்வதற்கு பின்வரும் காரணங்களே துணை போயின என்பதை இந்திய அரசியல்வாதிகளில் பலர் ஒப்புக் கொள்கிறார்கள்—

* 1987 இல் நடைபெற்ற மாநிலத் தேர்தலில் நடைபெற்ற மோசடி—
* தேசிய மாநாட்டுக் கட்சி இந்திரா காங்கிரஸ் கூட்டரசாங்கத்தின் ஓம் அப்பட்டமான ஊழல்கள்—

காஷ்மீர் முஸ்லிம் மாநாட்டு புலிகள்

இந்தக் குழுக்களில் முக்கியமானது "அல்லாஹ்வின் புலிகள்" என்ற இயக்கமாகும்— ஆப்கானிஸ்தானிய கெரில்லாத் தலைவர் குல்புதீன் ஹெக்மத்தியாருக்கு விசுவாசமான இந்தக் குழு காஷ்மீரில் சகல மதுச்சாலைகளையும் சினிமாக் கொட்டகைகளையும் மூடும்படி கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டது— ஹோட்டல்களில் பாகிஸ்தானிய சினிமாப் பட விடியோ படங்களை மட்டுமே காட்ட வேண்டும் என்று மிரட்டியது—

இந்தியப் பிரதமர் வி பி சிங் நிலைமை கட்டுமீறுவதை தடுக்க மாநிலத்திற்கு ஜக மோகனை ஆளுநராக நியமித்தார்— மாநில முதல்வர் பாரூக் அப்துல்லா பதவியை ராஜினாமாச் செய்தார்—

## இந்தியா — பாகிஸ்தான்

## பரஸ்பரம குற்றச்சாட்டு

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுதங்களையும் நிதி உதவிகளையும் வழங்கியது— ஆயுதப் பயிற்சியை அளிக்கிறது— பிரிவினைக்குத் தூபமிடுகிறது— இந்திய உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறது— இப்படி இந்தியா குற்றம சாட்டுகிறது—

இக் குற்றச்சாட்டைப் பாகிஸ்தான் மறுக்கிறது— காஷ்மீர் கலவரங்களுக்கு இந்தியாவே பொறுப்பு என்கிறது— இஸ்லாமதான் பிரதான கருப் பொருள்— ஐ நா மேற்பார்வையில் பொதுசன வாக்கெடுப்பை நடத்தாமல் இந்தியா இழுத்தடித்து வருகிறது— பாகிஸ்தானின் எதிர்க்குற்றச் சாட்டு இது!

பொதுசன வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்கிறது இந்தியா— 1972 இல் இந்தியாவும் பாகிஸ்தானும் செய்துகொண்ட சிம்லா சமாதான உடன்படிக்கை பொதுசன வாக்கெடுப்பு என்ற யோசனையை அப்புறம் ஒதுக்கித் தள்ளி விட்டதே என்பது இந்தியாவின் வாதம—

## சிமலா

## உடன்படிக்கை

காஷ்மீர் விவகாரத்தை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம பேசித் தீர்ப்போம் என்று தானே சிம்லா ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டோம் என்கிறது இந்தியா!

காஷ்மீர் மக்கள் மத்தியில் சுதேச ராஜ்யங்கள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ தமது விருப்பப்படி இணைந்து கொள்ள வசதி அளிக்கப்பட்டது—

## க்காஷ்மீர் மகாராஜா

## இந்தியா பக்கம சாய்வு

அப்போது ஜம்மு — காஷ்மீர் ஆட்சியாளராக மகாராஜா ஹரி சிங் இருந்தார்— அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்—

அவர் ஜம்மு — காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது என்று அறிவித்தார்—

பாகிஸ்தான் ஊடாகவும் இந்தியா ஊடாகவும் போக்குவரத்து வசதிகள் வேண்டும் என்றும் கோரினார் ஜம்முகாஷ்மீர் மக்களின் பெருமபான்மையானவர்கள் முஸ்லிமகள்—

மகாராஜாவின் முடிவை பாகிஸ்தானால் ஜீரணிக்க முடியவில்லை— பாகிஸ்தான் போக்குவரத்து வசதிகளைத் துண்டித்தது— "மலைஜாதி" மக்கள் என்ற போர்வையில் 1947 அக்டோபரில் காஷ்மீர் மீது படையெடுப்பை நடத்தியது— இந்து-முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன—

இந்தியாவும, பாகிஸ்தானும படைகளை நகர்த்தின— 1947 டிசமபரில் இந்தியா ஐ நா பாதுகாப்பு சபையின் கவனத்திற்கு விவகாரத்தை கொண்டு வந்தது— பாகிஸ்தான் ஆயுதத் தலையீட்டை நடத்துகிறது எனக் குற்றம சாட்டியது—

## சமாதான கமிஷன்

## அமைக்கப்பட்டது

1949 ஜூலை 26 ஆம திகதி சமாதான கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது— நடுத் தீர்ப்ப மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்கும யோசனையை கமிஷன் முன் வைத்தது— இரு தரப்பினரும இதற்கு கட்டுப்பட வேண்டும என்று கேட்டுக் கொண்டது—

இந்தியா அந்த யோசனையை நிராகரித்தது— இது பொதுசன வாக்கெடுப்பிலேயே முடியும. அது பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே அமையும் என்று கருதியே இந்தியா யோசனையை ஏற்க மறுத்தது—

காஷ்மீரில் பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும என்று ஐ நா பாதுகாப்பு சபை 1948 முதல் 1957 வரை 5 தடவை தீர்மானம நிறைவேற்றியது— இந்தியா மறுத்து வந்ததால் அதனை இதுவரை நடத்த முடியாது போய் விட்டது—

காஷ்மீர் நதிகள்

## முக்கிய பிணக்கு

பாகிஸ்தான் தனது பொருளாதாரம முழுக்க, முழுக்க இந்த நதிகளின் தண்ணீரிலேயே தங்கியிருக்கிறது என்று சர்வதேசச் சட்டத்தின்படி [illegible] தனக்கு உரிமை இருக்கிறது என்று கூறி வருகிறது— தண்ணீரை சமமாகப் பங்கிட வேண்டும என்பது அதன் வாதம—

தென் ஆசியாவில் [illegible] குட்டி வல்லரசாகத் திகழ்கிறது— அதற்குப் போட்டியாக பாகிஸ்தான் [illegible] கட்ட முனைகிறது [illegible] நாடுகளுடே இப் பிராந்தியத்தில் ஆட்டிப் படைக்க [illegible] என்ற போக்கில் செயலாற்றுகின்றன என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள்—

இலங்கை, சிக்கிம, பூட்டான் நேபாளம் ஆகிய நாடுகளுடன் இந்தியா நடந்து கொண்ட விதத்தை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்— நல்லெண்ணம் உள்ள [illegible] போது அறியலாம என்பது இந்த நாடுகள் கண்ட அனுபவ உண்மை— பூலோக [illegible] சுட்டிக்காட்டி விமர்சித்திருக்கிறார்—

## பிஹாரி முஸ்லிமகள்

## பாக் கரிசனை இல்லை

காஷ்மீர் ஆர்ப்பாட்டங்களை அடுத்து வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கும பாகிஸ்தான் வங்காளதேச பிஹாரி முஸ்லிமகள் விவகாரத்திலும, ஆப்கானிஸ்தான் விவகாரத்திலும எப்படி நடந்து கொண்டது என்பதை அரசியல் ஆய்வாளர்கள் புரட்டிக் காட்டுகிறார்கள்—

1971 இல் இந்தியா, பாகிஸ்தானில் இருந்த கிழக்கு பாகிஸ்தானை வங்காள தேசமாக வெட்டிப் பிரித்தது— அப்போது பிஹாரி முஸ்லிமகள் பாகிஸ்தானுக்கு விசுவாசமாக இருந்தார்கள்— வங்காள தேசத்தில் இருக்கும் அவர்களின் நிலைமை திரிசங்கு சுவர்க்கம— அவர்களை ஏற்றுக் கொள்வதில் பாகிஸ்தானுக்கு ஏனோ தானோ என்ற போக்கு—

## பக்தூனிஸ்தான்


## விவகாரம என்ன?

பக்தூனிஸ்தான் விவகாரத்தில் பாகிஸ்தானின் போக்கையும அரசியல் ஆய்வாளர்கள் ஆதாரம காட்டுகிறார்கள்—

பக்தூன்ஸ் அல்லது பதன் சமூகத்தவர்களின் பிரதேசத்தை பக்தூனிஸ்தான் என்பார்கள்— பாகிஸ்தானின் வட மேற்கு எல்லை மாநில மாவட்டங்களுக்கும,

[illegible]ஙிலும ஆப்கானிஸ்தானிய ஆதரவும தாக்கப்பட்டது— ஆப்கானிஸ்தானில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது—

இரண்டு முஸ்லிம நாடுகளை யுத்த சமரசம செய்து வைக்க எகிப்து, ஈராக், சவூதி அரேபியா, துருக்கி ஆகியன முன் வந்



யாகூப் கான்

தன— தற்காலிகமாக அமைதி ஏற்படுத்தப்பட்டது—

## சமரச முயற்சி

## கைகூட வில்லை

ஆயினும 1955 அக்டோபரில் இரு நாடுகளும் ராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டிக்கும அளவுக்கு நிலைமை புரையோடி மோசமாகியது—

ஆப்கானிஸ்தானிய — பாகிஸ்தானிய எல்லை நிர்ணய சச்சரவு இப்படி விசுவரூபம எடுத்தது—

பக்தூனிஸ்தான் மீதான பாகிஸ்தானின் தன்னாதிக்க உரிமையில் சர்ச்சை என்பதற்கே இடம கிடையாது என்று பிரிட்டன் தெரிவித்தது. இந்தியாவும ரஷ்யாவும ஆப்கானிஸ்தான் பக்கம நின்றன.

உற்றார் எல்லாம உறவினர் அல்லர். அதிவீர ராமபாண்டியன் அன்று சொல்லி வைத்த பாடம ஆப்கன் விவகாரத்தில் நன்கு பொருந்துகிறது அல்லவா?

## பாக் சிறுபான்மை

## மாநிலங்கள் குமுறல்

பஞ்சாப்பில் பாகிஸ்தான் கிளர்ச்சிக்கு தூபமிடுகிறது என்று இந்தியா குற்றம சாட்டி வருகிறது. பாகிஸ்தானில் மொத்தம உள்ள நான்கு மாநிலங்களில் மூன்று சிறுபான்மை மாநிலங்கள். சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லைப் பிரதேச மாநிலங்களான அவற்றில் இந்தியா தூபமிடுகிறது என்பது பாகிஸ்தானின் புகார்.

பாகிஸ்தானுக்கும, இந்தியாவுக்கும இடையிலான பல்வேறு சர்ச்சைகளும, முரண்பாடு

[illegible]ருக்கின்றன.

## தொலைக் காட்சியில்

## யாகூப்கான்

கடந்த 30ஆம திகதி பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் தொலைக்காட்சியில் தோன்றினார்.

நெருக்கடிகளுக்கோ, மிரட்டல்களுக்கோ பாகிஸ்தான் பணிந்து போகாது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும. இப்படி அவர் அறிவித்தார்.

அன்றைய தினம இந்திய ராணுவத் தலைவர் ஜெனரல் விஸ்வநாத் சர்மா எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

## இந்தியத் தளபதி

## எச்சரிக்கை

பாகிஸ்தான் யுத்த நிறுத்த எல்லைக் கோட்டை மீறி எவரையாவது அனுப்பினால் இந்தியா மிகக் கடுமையாக நடந்து கொள்ளும என்று அவர் கடுகடுத்தார்.

இதே வேளை, ராஜதந்திர ரீதியில் ஆதரவு தேடும பணியையும இந்தியா முடுக்கி விட்டிருக்கிறது—

வங்காளதேச விவகாரம இலங்கை விவகாரம ஆகியனவற்றிலும இந்தியா ராஜதந்திர ஆதரவுகளைத் தேடும முயற்சியில் நாட்டம காட்டியது என்பதை சற்றுக் குறிப்பிடுவது நல்லது.

## ஆதரவு தேடும பணியில்

## இந்தியா முழுமூச்சு

பாகிஸ்தான் காஷ்மீரில் முஸ்லிம தீவிரவாதிகளை தூண்டி விடுகிறது என்பதை வல்லரசுகளையும, முஸ்லிம நாடுகளையும ஏற்றுக் கொள்ள வைக்கும கைங்கரியத்தில் இந்தியா மும்முரம காட்டுகிறது.

கடந்த 27ஆம திகதி இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திர குமார் குஜ்ரால் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை எல்லாம சந்தித்தார்.

காஷ்மீரில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த இந்தியா மறுத்து வருகிறது — இதனால்தான் கொந்தளிப்பு நிலைமை என்ற பாகிஸ்தானின் கூற்றை அவர் மறுத்துரைத்தார்.

அமெரிக்காவின் கமயூனிஸ எதிர்ப்பு போக்கு இப்போது வெகுவாகக் குறைந்து வருகிறது அல்லவா?

இதே வேளை, இந்தியாவுடனான பொருளாதார நலன்களிலும அமெரிக்கா அதிக ஆர்வம காட்டி வருகிறது.

[illegible]ளிய வெளியுறவு அமைச்சர் யாகூப்கானின் தொனியும உள்ளடக்கமும எதிர்மாறாக இருக்கிறது" என்று அவர் முறையிட்டுக் கொண்டார்.

சீனாவுடனும இந்திய உறவு முன்னரைப் போல மோசமானதாக இல்லை. திபெத்திய விவகாரத்தில் சீனாவுக்குச் சாதகமாகவே இந்தியா நடந்து கொண்டிருக்கிறது.

பீகிங்கில் ஜனநாயக உரிமை கோரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை சீன அரசு சுட்டுப் பொசுக்கி அடக்கிய போதிலும இந்தியா சம்பிரதாயத்திற்கு விசனம தெரிவித்ததுடன் அது உள்நாட்டு விவகாரம என்று கைகழுவி விட்டது.

## சீனத் தூதுவரிடம

## குஜ்ரால் விளக்கம

இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால், புதுடில்லியிலுள்ள சீனத் தூதுவர் கோவெய்யையும சந்தித்தார்.

இந்திய உள்நாட்டு விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுகிறது என்பதை நமபுவதற்கான காரணங்கள் இந்தியாவிடம உண்டு என்று அவர் சீனத் தூதுவரிடம சொல்லி வைத்தார்.

இந்திய உப கண்டத்தில் நட்புறவு சூழ்நிலையைப் பேண சீனாவின் உதவி வேண்டும என்றும குஜ்ரால் கோரியிருக்கிறார்.

## அரபு நாடுகளுக்கு

## தூதுவர்கள் தூது

இவற்றுக்கும மேலாக அவர் அரபு நாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர்களை அழைத்து விவரங்களைத் தெரிவித்திருக்கிறார். ஈராக், குவைத்திலுள்ள இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு ஆகியனவற்றுக்கும அவர் விசேஷ தூதுவர்களை அனுப்பி வைத்தார்.

காஷ்மீர் விவகாரத்திற்கு சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காண வேண்டும.

பாகிஸ்தானும, இந்தியாவும 1972இல் கைச்சாத்திட்ட சிமலா உடன்படிக்கை இதனை வலியுறுத்துகிறது.

இந்த உடன்படிக்கைக்கு இந்தியா கட்டுப்பட்டிருக்கிறது என்பதை இந்தியத் தூதுவர்கள் அந்த அந்த நாடுகளில் தர்க்க ரீதியாக முன்வைப்பார்கள்.

பாகிஸ்தானும, இந்தியாவும ஈர நிலத்தில் ஏரைப் பிடித்திருக்கின்றன. காஷ்மீர் விவகாரத்தை முன்வைத்து இரு நாடுகளும யுத்த விளிமபிற்கே வழுகிச் செல்கின்றன.

இது காஷ்மீரின் பசும புல் தரையை பாலைவனமாக்கவே உதவும. மயான பூமியாக்கவே வழிவகுக்கும. (ண)

# இருட்டில் நடப்பவற்றை வெளிச்சமாக்கும் சிந்து

கடந்த வாரச் சிந்துவில் பிரசுரமான "பனாமா - அமெரிக்க படையெடுப்பு நோக்கம்" என்ற தலைப்பிலான அரசியல் கட்டுரை பிரமாதம! அதில் எஸ் எஸ் எஸ்ஸின் அடுக்கு மொழிகளும பழமொழிகளும "பூலோக சஞ்சாரத்தை" மேலும மெருகூட்டியது-

— செல்வன் மொஹமட் நாபில், வறக்காமுறை.

★

ஒயிலான ... தொகுப்பில் "எந்தன் உள்ளத்து ராணி"யை வர்ணித்து மனமொன்றி நிற்கும மர்மக் கவிஞரின் கவிதை வரிகள் எமமை உருக வைத்தன!

— அசிபா ராசிக், ஒஹபேசேகர ட்வுன்-

★

இருட்டில் நடப்பவைகளையும வெளிச்சத்துக்குக் கொண்டு வரும சாமர்த்தியம வாய்ந்த சிந்து "மறைந்த பின்னரும மர்மங்கள் தொடரும ரஜனீஸ் சுவாமி" என்ற கட்டுரையின் மூலம கண்காணாத இடத்தில் வாழ்ந்த ரஜனீஸ் சுவாமியின் வாழ்க்கை வரலாற்றைச் சுவை படத் தந்ததோடு இன்னும என்னென்ன மர்மங்களை வெளியிடப் போகிறாளோ?

— செல்வி நிஸானா முஹமமட், அக்குறணை-

★

சிந்து சிறந்த ஆக்கங்கள் சிறக்கவில்லை! அனைத்துமே அருமை! மர்மக் கவிஞர் முன் பக்கக் கவிதையை மாற்றுச் சிந்தனையில் வடித்து இருக்கிறார்!

கட்டுரையும என்னை மிகவும கவர்ந்தன!

— செல்வி ஏ எம ஆயிஷாபீபீ, கம்பளவல-

★

அருவருக்கத்தக்க செயல்களைப் புரிந்து ஒரு சிலரது அபிமானத்தையும மிகுப் பலரது வெறுப்பையும சமபாதித்துக் கொண்டவர் ரஜனீஸ்! அப்படி இருந்தும தனக்கென ஒரு தனிப்பாணியை உருவாக்கி அதன் மூலம உலகில் தனக்கு ரசிகர்களை உருவாக்கி மறைந்தும விட்டார்! அவர் மறைந்தாலும அவரது இயக்கம மறையாது என்றே நமபுகிறேன்!

— என் எம எம சனூஸி, அக்குறணை-03.

★

"மறைந்த பின்னரும மர்மங்கள் தொடரும ரஜனீஸ் சுவாமி" என்ற கட்டுரை மூலம ரஜனீஸ் சுவாமியாரைப் பற்றி மேலும பல விடயங்களை அறியக் கூடியதாக இருந்தது!

— ஏ பி எம ...ப்ரி, பேருவளை

★

"சிந்து"வில் வெளியான கதைகள், கட்டுரைகள், கவிதைகள்

★

சிந்துவின் முகப்புக் கவிதை "எந்தன் உள்ளத்து ராணி" என் உள்ளத்திலும இவளைப் போல் ஒருத்தி தொலுவேறி என் உள்ளத்து ராணியாவாள் என்ற அதில் மனமொன்றி விட்டேன்! "செக்ஸ் சாமியார் ரஜனீஸ் மறைந்த பின்னும தொடரும மர்மங்கள்" என்ற கட்டுரை அவரைப் பற்றித் தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது!

— தே ஈஸ்வரராசா, பண்டாரவளை.

★

சிந்துவைத் தொட்டதும "எந்தன் உள்ளத்து ராணி"யின் கவித் துளிகள் என் உள்ளத்தையே கொள்ளை கொண்டது- தெவிட்டாத தேன் அமுதமாய் கவி வடிக்கும மர்மக் கவிஞரே உமக்கு எனது பாராட்டுக்கள்!

— செல்வி அருந்தமிழரசி தமிழ்ச்செல்வன் நாவலப்பிட்டி.

★

சிந்துவின் அ...னை ஆக்கங்களும ஏ வன்! குறிப்பாக திரிஞானியிடம கேட்கும கேள்விகளுக்கு அருமையாக பதில்களை அளித்து என்னையும சிந்துவின் வாசகர்களையும வியக்க வைத்தார்!

— ஸ்ரீதர் வசந்தா, வெளிஓயா மேல் பிரிவு-

★

"மறைந்த பின்னரும மர்மங்கள் தொடரும ரஜனீஸ் சுவாமி" என்ற கட்டுரை அருமையிலும அருமை. பிரார்த்தனை என்றால் அதுதான் பிரார்த்தனை!

— செல்வன் பீட்டர் இராஜேந்திரன் அலெக்சாந்தர் லொனக், வட்டவளை-

★

சென்ற வார கேள்வி - பதிலில் கமல், ரஜனி, பிரபு மூவருக்குமே சிரிக்கத் தெரியாதென திரிஞானி கூறினார்! பார்ப்போரை வசீகரிக்கும சிரிப்பு கமலுடையது! கன்னத்தில் அழகாய் குழி விழும சிரிப்பு பிரபுவுடையது! அமைதியான சிரிப்பு ரஜனியுடையது என்பது கூடவா திரிஞானிக்கு தெரியவில்லை!

— பி வி நித்தியானந்தன், ரி ஜோதிலக்ஷ்மி, கண்டி-

★

மனையும மங்கையும பகுதியில் "பெண்களின் வாழ்க்கையில் கசப்பான நாட்களா?" என்னும கட்டுரை நல்ல படிப்பினையாக அமைந்திருந்தது!

— எஸ் கிறேசியா, மாத்தளை-

★

மர்மக் கவிஞரே! உமது கற்பனைத் தோணி கண்டு எந்தக் கன்னியுமுனைக் கண்டோடுவாள் நாணி!

ஏனென்றால் உன் பேனைக்கு தீனி என அச்சத்தால் நடுங்குமவள் மேனி!

மர்மக்கவியே! உமது பாணி - வளரும இளங் கவிஞர்களுக்கோர் ஏணி! என்றும உன் நாவில் இருப்பாள் வாணி!

— செல்வன் மெய்யன் நடராஜா, பூண்டுலோயா-

## பரஸ்பரம்

பாராட்டுக்கள் - என்றாலும ஏன் சார் இலக்கிய பீடத்தை அடிக்கடி மறந்து விடுகிறீர்கள்?

— ஆர் ராஜ்பாரதி, நாவலப்பிட்டி.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர்கதையில் பிரேமினி பள்ளி வாழ்க்கையை நினைப்பதற்கு என்ன காரணமாக இருக்குமோ? வாசகர் நெஞ்சங்களில் இப்படியொரு கேள்வி எழத்தான் செய்யும! சிந்துவே நீதான் இதற்கொரு முடிவைத் தருவாய்!

— எஸ் முகமமட் அஜ்மல் பெரிய கிண்ணியா-04-

★

அனைத்தும சுவைக்கும்படியாக அமைந்திருந்தன! அதிலும உட்கார்ந்தே ஜெயித்த மாமிச மலையைப் பற்றிய கட்டுரையை வாசித்துவிட்டு நானும சற்றுப் பயந்தே விட்டேன்!

— எம ஏ சி எம பாயிஸ், புத்தளம-

★

பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இமரான்கான் ரசிகரை உதைத்துத் தள்ளியது, மன்னிப்புக் கேட்டது, கால் ஒடிந்தது எல்லாம முன்கோபக்காரர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும!

— எஸ் எம ரமஸான், மருதமுனை-1.

★



# பரஸ்பரம்

பாராட்டுக்குள் - என்றாலும் ஏன் சார் இலக்கிய பீடத்தை அடிக்கடி மறந்து விடுகிறீர்கள்?

— ஆர் ராஜ்பாரதி, நாவலப்பிட்டி.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர்கதையில் பிரேமினி பள்ளி வாழ்க்கையை நினைப்பதற்கு என்ன காரணமாக இருக்குமோ? வாசகர் நெஞ்சங்களில் இப்படியொரு கேள்வி எழத்தான் செய்யும்! சிந்துவே நீதான் இதற்கொரு முடிவைத் தருவாய்!

— எஸ் முகம்மட் அஜ்மல் பெரிய கிண்ணியா-04.

★

வீரத்திற்கொரு முறை தென்றலைப் போல் தவழ்ந்து வரும் சிந்துவின் அனைத்து அம்சங்களும் ஜோராயிருந்தன!

— கே நிஹார், கே சுகர்னா, மதவாச்சி.

★

"காசை இறைக்கின்றார்", "எனது சொர்க்கம்" என்ற இரு கவிதைகளும் "பெண்களின் வாழ்க்கையில் சுகபிரான நாட்களா? - சாமர்த்தியமாக சமாளிக்கத் தெரிய வேண்டும்" என்ற அனைத்தும் சுவைக்கும்படியாக அமைந்திருந்தன! அதிலும் உட்கார்ந்தே ஜெயித்த மாமிச மலையைப் பற்றிய கட்டுரையை வாசித்து விட்டு நானும் சற்றுப் பயந்தே விட்டேன்!

— எம் ஏ சி எம் பாயிஸ், புத்தளம்.

★

பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இமரான்கான் ரசிகரை உதைத்துத் தள்ளியது, மன்னிப்புக் கேட்டது, கால் ஒடிந்தது எல்லாம் முன்கோபக்காரர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்!

...— எஸ் எம் ரமஸான், மருதமுனை-1.

★

முகப்பை அலங்கரித்திருந்த "எந்தன் உள்ளத்து ராணி" என்ற முகப்புக் கவிதை வெகுஜோர்! அத்துடன் "சூரிய வெளிச்சத்தில் வாழும் குழந்தைகள்", "மூன்று கால்களுடன் அதிசயக் குழந்தை" என்ற பரிதாபகரமான உண்மைச் சம்பவம் எம் மனதை உருக்கியது!

— செல்வன்கள் இஸ்ஸதின், ஸவாஹிர், சுபியான், லரீப், வட்டுப்பிட்டிய.

# டெலிவிஷன்

## ரூபவாஹினி

4—2—1990

சேவை 1

8-25 தேசியதின கொண்டாட்டங்கள்- 90 (நேரடி ஒளிபரப்பு)
9-40 "நிதஹாஸ் ஜய சங்கேத்த"
9-50 "நிதஹாஸ் மியுரி கீ"
10-10 தேசிய கீதம்
10-25 "தேசிய கொடி - வரலாறு"
10-40 ஒளிபரப்பு முடிவு

சேவை 11

3-00 "ஜிலெட் வேல்ட் ஸ்போட் ஸ்பெஷல்"
4-00 தேசிய தின நிகழ்ச்சி
7-15 செய்திகள் - தமிழ்
8-00 செய்திகள் - சிங்களம்
8-30 "நிதஹாஸ் சமருவ"
9-00 "ஜனசவிய" - சிங்களம்
9-30 செய்திகள் - ஆங்கிலம்
10-00 "பொனான்ஸா"
10-50 ஒளிபரப்பு முடிவு


## ஐ. டி. என்.


சேவை 1

11-00 "விட் இட்ஸ்"
11-30 என்ட் ரீ விப்ரீ
12-00 வண்ணப் பூக்கள்
12-30 விச்சித்திர கீத்த
1-00 முத்துச்சரம்
1-30 நீந்தத் தெரியாத மீன்கள்
1-45 ஒளிபரப்பு முடிவு

சேவை 11

5-00 புட்போல் மேட் இன் ஜெர்மனி
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 ரச மியுரு
6-45 கௌரி கீத்த கட்டிலு
7-00 சுப பிரார்த்தனா
7-30 வெரயிட்டி பெயார்
8-00 "லெட் தெயார் பீ லவ்"
8-30 செய்திகளும் - கருத்துகளும்
9-00 "ரச விந்தன"
9-30 "நிக்காடோ கீ"
10-00 செய்திகள் - ஆங்கிலம்
10-26 "நிதஹாஸ் காலய"
11-26 ஒளிபரப்பு முடிவு



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

— 5 —

அந்த ஆண்டு பாடசாலைப் பரீட்சையில் தேன்மொழி பாடசாலையிலேயே முதல் மாணவியாக சித்தியடைந்திருந்தாள். பாடசாலையில் நடந்த சோதனையில் சித்தி பெற்ற அவளால் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனையில் வெற்றி பெற முடியவில்லை.

ஒருநாள் அவளின் தந்தை திடீரென ஒரு விபத்தில் சிக்கி மரணமானார். தந்தையின் வருமானத்தில் வாழ்ந்த குடும்பம் நிர்க்கதியான நிலைக்கு வந்து விட்டது!

தாங்க முடியாத சோகம் ஒரு புறம். வறுமை மறுபுறம். இந் நிலையில் அவளால் படிப்பைத் தொடரவும் முடியவில்லை. அரசாங்கப் பரீட்சைக்குத் தோற்றவும் முடியவில்லை!

ஏதாவது உத்தியோகம் செய்யலாம் என்றால் அதற்கேற்ற வயதும் வரவில்லை. மிகக் குறைந்த தகுதியான ஜீ சி ஈ அரசாங்கப் பரீட்சைக்குக் கூட தோற்றியிருக்கவில்லை. இந் நிலையில் அவள் எங்கு போய் தொழில் தேடுவாள்?

அவளுக்கு வேறு சகோதர சகோதரிகளும் இருக்கவில்லை. தாய்தான் ஏதோ சிறு சிறு வேலைகள் செய்தும் வீடுகளில் பாத்திரங்கள் கழுவியும் கிடைக்கும் வருமானத்தில் அவளை வளர்த்தாள்.

தேன்மொழியை சில நாட்களுக்கு முன்னர் பிரேமினி சந்தித்த போது பழைய சம்பவத்தை நினைத்துக் கொண்டாள்! உள்ளத்தின் ஒரு மூலையில் உறங்கிக் கிடந்த வஞ்சம் கிளர்ந்தெழுந்தது!

எனினும் அவள் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அந்த சம்பவத்தை மறந்து விட்டவள் போல் சிரித்துப் …

நினைத்துப் பார்த்துக் கொண்டே நித்திரையிலாழ்ந்தாள் பிரேமினி.

மறுநாளும் அவள் வழமை போல திலீபனைச் சந்திக்கத் தவறவில்லை. இருவருக்கிடையிலும் சிறிது நேரம் மௌனம் நிலவியது. பின்னர் திலீபன்தான் ஆரம்பித்தான்!

"என்ன பிரேமினி எதுவுமே பேசாமலிருந்தால் எப்படி?"

"திலீபன்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வதென்றே தோன்றவில்லை" என்றாள் சோகமாக.

"நம் காதலை தூக்கியெறிந்து …

நினைக்கிறீர்களா...? அது என்னால் முடியாது!"

"அப்படியானால் என்னதான் செய்யலாம் என்கிறாய்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை! வாழ்நாள் முழுவதும் உங்களுடனேயே வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரு வழி இருக்கிறது. ஆனால் நீங்கள் சம்மதிக்க வேண்டுமே!"

"என்ன... வழி இருக்கிறதா? என்ன வழி? சீக்கிரம் சொல் பிரேமினி. எதுவாக இருந்தாலும் செய்கிறேன்!"


"எதுவாக இருந்தாலும் செய்வீர்களா?"

இருக்க வேண்டும்? ஏன் வேறு பெண்ணாக இருக்கக் கூடாது என்றுதான் கேட்கிறேன்!"

"உன்னுடைய வாதம் சரி. ஆனால் என் நிலை வேறு. யாருடைய சாவுக்கும் நான் காரணமாக இருந்து அதன் மூலம் உன்னை அடைவதென்றால் அந்த வாழ்க்கை எனக்குத் தேவையில்லை!"

"உங்கள் தலையெழுத்து அதுவாக இருந்தால் உங்களால் என்ன செய்ய முடியும்?"

"என் தலையெழுத்துப்படி ஒருத்தியின் சாவில்தான் என் காதல் கைகூடுமென்றால் அந்த …



… விடுவது மிக இலகுவான காரியம் என்று நேற்று கூறினாயே!"

"அப்படித்தான் சொன்னேன். …

"நிச்சயமாக உன்னை அடைவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன்!"

…

… வாழ்க்கை எனக்குத் தேவையில்லை. நான் காலமெல்லாம் பிரமச்சாரியாகவே இருந்து விடுவ…

மணந்து கொள்ள முடியும்? இரண்டு மனைவிகளுடன் வாழச் சொல்கிறாயா...?"

"நான் அப்படிச் சொல்லவில்லை அதற்கும் ஐடியா வைத்துத்தான் இருக்கிறேன்!"

"அப்படியா...? என்ன?"

"மூன்று மாதத்தில் அவள் இறந்து விட்டால் அது அவளின் தலைவிதி! அதற்காக நாம் ஒரு சொட்டுக் கண்ணீரைத்தான் விட முடியும்! அதற்கு மேல் நம்மால் எதுவும் செய்ய முடியாது! ஆனால் இறக்காமல் அவள் உயிருடன் இருந்தால் அவளை நீங்கள் விவாகரத்துச் செய்து விட வேண்டும்...!"

"என்ன...?"

"ஆமாம்! சாவை விட அது எவ்வளவோ மேல்!"

"பிரேமினி! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? நீ எப்பொழுது இப்படி கொடுமைக்காரியாக மாறினாய்? கொடுமையான வார்த்தைகளை அடுக்கடுக்காக அளக்கிறாயே! இப்படி எல்லாம் பேச உனக்கு வெட்கமாக இல்லை. சே... உன்னுடன் இதற்கு மேலும் பேசுவதற்கு எனக்கு விருப்பமில்லை!"

"திலீபன் பொறுங்கள். நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பின் ஆழம் எத்தகையது என்பது எனக்குப் புரிகிறது. தலையெழுத்தினாலோ பயத்தினாலோ நான் சாக வேண்டுமென்பதுதான் உங்கள் எண்ணம்! எல்லாம் என் தலைவிதி! உங்கள் மீது அடங்காக் காதல் கொண்டேனே அது என் தவறுதானே..."

இப்படி பலவாறு பிரேமினி புலம்பிக் கொண்டிருந்தாள்.

அவளின் புலம்பலைக் கேட்டு திலீபனுக்கு மிகுந்த தர்மசங்கடமாகப் போய் விட்டது. அவனால் மேலும் அந்த புலம்பல்களைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை! பொறுமை இழந்தவனாகப் பின்னர் "பிரேமினி நிறுத்து! நான் இப்பொழுது என்னதான் செய்ய வேண்டுமென்கிறாய்?"

திலீபன் இப்படிக் கூறியதும் கல்லையும் கரைத்து விடும் தனது கபட நாடகம் பயன் தரப் போகிறதென்று ஆறுதலடைந்தாள் பிரேமினி. அவள் கூறினாள்...

"என்ன செய்ய வேண்டுமா? அதைத்தான் நான் ஏற்கனவே சொல்லி விட்டேனே! என் மீது உண்மையான அன்பிருந்தால் அதைச் செய்யுங்கள்!"

"அதாவது... நான் உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும்..."

"................" பிரேமினியிடம் மௌனம் நிலவியது.

"சரி... உன் விருப்பப்படியே நான் திருமணம் செய்து கொள்வ…

## பூங்காவனங்கள்

— நிலா தமிழின்தாசன் —

ஜனனம் மரணம் சகஜம் — மனிதர்
யாவர்க்கும் பொது இந்த உலகம்!
மனிதரில் ஆயிரம் வண்ணம் — அவை
மலர்களின் வடிவெனல் திண்ணம்!

★

வேற்றுமை வாழ்வுக்குத் தீமை — அதை
விடுத் தொன்று படுவோம் நாமே!
போற்றுதற் குரியது அன்பு — அதைப்
புரிந்தொழு கிடுதல் பண்பு!

★

கலகங்கள் உலகத்தை அழிக்கும் — மனம்
கனிந்தே இணைந்திடச் செழிக்கும்!
நிலமெங்கும் வேண்டுவ தமைதி — அந்த
நிம்மதி தனையே சமைநீ!

★

எம்மதமும் தரும் நீதி — அதை
என்றென்றும் வாழ்வினில் சாதி:
சம்மதம் படும் நல்ல மனங்கள் — வாசம்
தந்திடும் பூங்காவனங்கள்

"திலீபன்! குத்தல் பேச்சு வேண்டாம். உங்களுக்கு விருப்பமில்லா விட்டால் விட்டு விடுங்கள். நான் எப்படியோ செத்துத் தொலைகிறேன்!"

"செத்துத் தொலைகிறாயா? நான் அப்படியா சொல்கிறேன்... சரி விடு. உன் விருப்பப்படியே நான் வேறொருத்தியை மணந்து கொள்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். மூன்று மாதங்களுக்குப் பின் அவளை எப்படி விவாகரத்துச் செய்ய முடியும்?"

"அதெல்லாம் வெரி சிம்பல்! பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்பார்களே. கேள்விப் பட்டிருக்கிறீர்களா!"

தொடர் கதை

"சரி... ஒரு அப்பாவிப் பெண்ணை திருமணம் செய்து பின்னர் விவாகரத்துச் செய்து விட்டால் அவளின் எதிர்காலம் என்ன ஆவது...?"

"அதையெல்லாம் ஆழமாகச் …

"அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அது அவள் இஷ்டம்!"

"உனக்கென்ன பிரேமினி... நீ இலேசாகச் சொல்லி விட்டாய்! தன் மனைவியை வேறொருவன் தீண்டுவதை எந்தக் கணவனாலும் தாங்கிக் கொள்ள முடியுமா...?"

"அதாவது அவள் மீது மனைவி என்ற பந்தம் உங்களுக்கு வளர்ந்து விடும் என்கிறீர்கள்..."

"நான் அப்படிச் சொல்லவில்லை! கணவன் - மனைவி உறவென்பது தீராத பந்தம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்..."

"உம்... பந்தம்! என்னைப் பொறுத்தவரை இது ஒரு போலி நாடகம். உங்களை அதில் நடிக்கத்தான் சொல்கிறேன். உங்களால் அவளை மறக்க முடியா விட்டால் என்னை மறந்து விடுங்கள்!"

"அப்படிச் சொல்லாதே பிரேமினி. நான் குழம்பிப் போயிருக்கிறேன்!"

"குழப்பத்தை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டாம். நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நாளை நல்ல முடிவுடன் என்னைச் சந்தியுங்கள்..."

"சரி பிரேமினி... நாளை சந்திப்போம். எதற்கும் நீ நல்ல ஒரு அழகான பெண்ணாகப் பார்த்து ஏற்பாடு செய்!"

"என்ன திலீபன்... திரும்பவும் …

யலாம் என்றால் அதற்கேற்ற வயதும் வரவில்லை. மிகக் குறைந்த தகுதியான ஜீ. சி. ஈ. அரசாங்கப் பரீட்சைக்குக் கூட தோற்றியிருக்கவில்லை. இந் நிலையில் அவள் எங்கு போய் தொழில் தேடுவாள்?

அவளுக்கு வேறு சகோதர, சகோதரிகளும் இருக்கவில்லை. தாய்தான், ஏதோ சிறு சிறு வேலைகள் செய்தும் வீடுகளில் பாத்திரங்கள் கழுவியும் கிடைக்கும் வருமானத்தில் அவளை வளர்த்தாள்.

தேன்மொழியை சில நாட்களுக்கு முன்னர் பிரேமினி சந்தித்த போது பழைய சம்பவத்தை நினைத்துக் கொண்டாள்! உள்ளத்தின் ஒரு மூலையில் உறங்கிக் கிடந்த வஞ்சம் கிளர்ந்தெழுந்தது!



எனினும் அவள் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அந்த சம்பவத்தை மறந்து விட்டவள் போல் சிரித்துப் பேசினாள். அவளுடைய தாய் தான் தன் வீட்டுக்கும் பாத்திரங்கள் கழுவ வருபவள் என்பதை அறிந்து அவளின் வறுமை நிலைக்காக அனுதாபப்படுபவள் போல காட்டிக் கொண்டாள்!

இந்த விஷயங்களை எல்லாம் விடுவது மிக இலகுவான காரியம் என்று நேற்று கூறினாயே!"

"அப்படித்தான் சொன்னேன். ஆனால் அதன் பின்பு எவ்வளவு வேதனைப்பட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"வேதனைப்பட்டாயா ஏன்?"

"என்ன திலீபன் இப்படிக் கேட்கிறீர்கள்? உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியும் என்று

"நிச்சயமாக உன்னை அடைவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன்!"

"வார்த்தை தவற மாட்டீர்களே?"

"நிச்சயமாக மாட்டேன். ஏன் பிரேமினி உனக்கு இந்த சந்தேகம்? சீக்கிரம் சொல்... நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீங்கள் உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும்!"

"எ... என்ன? திருமணம் செய்து கொள்ள வேண்டுமா? என்ன உளறுகிறாய்? திருமணம் என்றால் யாரை? அதனால் உன்னை எப்படி அடைய முடியும்...?"

"அவசரப்படுகிறீர்களே திலீபன்! நான்தான் ஒவ்வொன்றாகச் சொல்வேனே. நீங்கள் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும்!"

"உம்... அப்படியானால் நீ?"

"என்னை மூன்று மாதங்களுக்குப் பின்னர் நீங்கள் மணந்து கொள்ள வேண்டும்!"

"என்ன சொல்கிறாய் பிரேமினி? ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாய்! அதோடு இன்னொரு குண்டையும் போடுகிறாய்! நான் வேறொரு பெண்ணையும் மணந்து கொண்டு உன்னையும் மணந்து கொண்டு இரண்டு பெண்டாட்டிக்காரனாக வேண்டுமா?"

"என்ன செய்வது? உங்கள் சோதிட பலன் அப்படி இருக்கிறதே! நான் உங்களுக்கு இரண்டாவது மனைவியாக வாய்க்கவே விரும்புகிறேன்!"

"அப்படியானால் என் முதல் மனைவி அநியாயமாக சாக வேண்டும் என்கிறாய்? அப்படித் தானே?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. சாவது முதல் மனைவியாக இருந்தால் அது ஏன் நானாக

வாழ்க்கை எனக்குத் தேவையில்லை. நான் காலமெல்லாம் பிரம்மச்சாரியாகவே இருந்து விடுகிறேன்"!

இப்படி அவன் சொன்னதும் பிரேமினி கலகலவென நகைத்தாள். பின்னர் "திலீபன்! நீங்கள் எவ்வளவோ படித்திருந்தும் பணமிருந்தும் பிரயோசனமில்லை. அறிவில்லாதவர் போல் பேசுகிறீர்கள்! உங்கள் மனதை அறியத்தான் நான் அப்படிச் சொன்னேன்! உண்மையில் யாரோ ஒருத்தி இறக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கில்லை. அவள் இறப்பாள் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை!"

"அப்படியானால் நான் ஏன் இன்னொருத்தியை மணக்க வேண்டும்?"

"அங்குதான் பிரச்சினை. சோதிடர் சொன்ன விஷயம் நடக்கப் போவதும் இல்லை! ஏனென்றால் சோதிடமே உண்மை இல்லை. ஆனால் மனப்பயம் என்று ஒன்றிருப்பது மனித இயல்பு அல்லவா?

நானும் அந்த மனப்பயத்துக்கு ஆளாகி விட்டேன்! நமக்கு திருமணம் நடந்து விட்டால் நான் அந்த மனப்பயத்திலேயே செத்து விடுவேன். ஏதோ மனத் திருப்திக்காகத்தான் வேறொருத்தியை மணந்து கொள்ளுங்கள் என்கிறேன். அது புரியவில்லை உங்களுக்கு!"

"அப்படியானால் அவள் சாக மாட்டாள் என்கிறாய்!"

"நிச்சயமாக அவள் சாக மாட்டாள்! அதோடு எனக்கிருக்கும் இந்த மனப்பயமும் அவளுக்கு இருக்காது! ஏனென்றால் நாம் அந்த விஷயத்தை அவளிடம் சொல்லப் போவதில்லையே!"

"சரி... அவள் இருக்கும் போது நான் எப்படி உன்னையும்

திலீபனுக்கு மிகுந்த தர்மசங்கடமாகப் போய் விட்டது. அவனால் மேலும் அந்த புலம்பல்களைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை! பொறுமை இழந்தவனாகப் பின்னர் "பிரேமினி நிறுத்து! நான் இப்பொழுது என்னதான் செய்ய வேண்டுமென்கிறாய்?"

திலீபன் இப்படிக் கூறியதும் கல்லையும் கரைத்து விடும் தனது கபட நாடகம் பயன் தரப் போகிறதென்று ஆறுதலடைந்தாள் பிரேமினி. அவள் கூறினாள்...

"என்ன செய்ய வேண்டுமா? அதைத்தான் நான் ஏற்கனவே சொல்லி விட்டேனே! என் மீது உண்மையான அன்பிருந்தால் அதைச் செய்யுங்கள்!"

"அதாவது... நான் உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும்..."

"..............." பிரேமினியிடம் மௌனம் நிலவியது.

"சரி... உன் விருப்பப்படியே நான் திருமணம் செய்து கொள்வதென்றால் அதற்கு ஒரு அப்பாவிப் பெண் வேண்டுமே?"

"அந்தக் கவலை உங்களுக்கெதற்கு? அதை என்னிடம் விட்டு விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"அதாவது எனக்காக நீ பெண் தேடப் போகிறாய்... அப்படித் தானே! நீதான் உண்மையான உத்தம பத்தினி! மனைவி அமைந்தாலும் உன்னைப் போல் அமைய வேண்டும் பிரேமினி!"

விவாகரத்துச் செய்ய முடியுமா?"

"அதெல்லாம் வெரி சிம்பல்! பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்பார்களே. கேள்விப்பட்டிருக்கிறீர்களா!"

## தொடர் கதை

"சரி... ஒரு அப்பாவிப் பெண்ணை திருமணம் செய்து பின்னர் விவாகரத்துச் செய்து விட்டால் அவளின் எதிர்காலம் என்ன ஆவது...?"

"அதையெல்லாம் ஆழமாகச் சிந்திக்க முடியாது திலீபன். சாவை விட அது எவ்வளவோ மேல். அது மட்டுமல்ல, வறிய நிலையில் உள்ள ஒருத்தியை மணந்து பின்னர் விவாகரத்துச் செய்யும் போது அவளுக்கு ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து விட்டால் அதனால் அவள் வசதியாக வாழலாம்! அவளுக்குப் புதுவாழ்வு அமையும்!"

"உண்மைதான்... யாராவது ஏமாந்தவன் அவளை மணந்து கொள்ளவும் கூடும்...!"

"நான் அப்படிச் சொல்லவில்லை! கணவன் – மனைவி உறவென்பது தீராத பந்தம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்..."

"உம்... பந்தம்! என்னைப் பொறுத்தவரை இது ஒரு போலி நாடகம். உங்களை அதில் நடிக்கத்தான் சொல்கிறேன். உங்களால் அவளை மறக்க முடியா விட்டால் என்னை மறந்து விடுங்கள்!"

"அப்படிச் சொல்லாதே பிரேமினி. நான் குழம்பிப் போயிருக்கிறேன்!"

"குழப்பத்தை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டாம். நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நாளை நல்ல முடிவுடன் என்னைச் சந்தியுங்கள்..."

"சரி பிரேமினி... நாளை சந்திப்போம். எதற்கும் நீ நல்ல ஒரு அழகான பெண்ணாகப் பார்த்து ஏற்பாடு செய்!"

"என்ன திலீபன்... திரும்பவும் கிண்டலா? நான் படும் வேதனை உங்களுக்கு கேலியாகத் தெரிகிறது அல்லவா...?"

"இல்லை பிரேமினி... விளையாட்டாகத்தான் சொன்னேன். நாளை சந்திப்போம்...!"

தன்னுடைய திட்டம் நிறைவேறி வருவதை அறிந்து மகிழ்ச்சியுடன் விடை பெற்றுச் சென்றாள் பிரேமினி. இனி அடுத்த நாடகத்துக்கு ஒத்திகை பார்க்க வேண்டிய வேலை அவளுக்கு!

[தொடரும்]

# உலகநியதி இது

— சோமலிங்கம் —

சென்றதை எண்ணி வருந்தாதே
செத்தது திரும்ப முடியாதே
நின்றது எதுவும் உலகில் இல்லை
நினைப்பது எல்லாம் நடப்பதில்லை,
குன்றும் குழியாய் மாறி விடும்
குருத்தும் ஒரு நாள் பழுப்படையும்
என்றும் வாழ்வு ஒரு நிலையில்
இருக்கும் என்று எண்ணாதே!

★

தவறிப் போனது தூரம் என்று
சஞ்சல பட்டு நாள் தோறும்
கவலைப் பட்டுத் திரிவதனால்
கைவிட்டுப் போனது கிடைத்திடுமா?
எவரும் இதற்கு விலக்கல்ல
எல்லோருக்கும் இது பொதுவாம்
பவ வினையாலே செனித்தவர் நாம்
பஞ்சமும் செல்வமும் மாறிவரும்!

★

மறைந்ததை நினைத்து நாள் தோறும்
வருந்துவதாலே வெளிப்படுமா?
நிறைந்ததும் ஒருகால் குறைந்து விடும்
நிமிர்ந்ததும் என்றோ வளைந்து விடும்
உறைந்ததும் உருகும் உயர்வு என
உறைந்ததும் மெல்லத் தாழ்ந்து வரும்
இரைந்ததும் ஒருநாள் அமைதியுறும்
இதுவே உலக நியதி அடா!

# உல்லாசப் பயணங்களில் உள்ளம் களிப்பவர்கள்

சிறிதாகப் பூத்து நிற்கும் சின்ன மலர்கள் கூட என் கண்களில் கண்ணீரை வரவழைத்து ஆழ்ந்த சிந்தனைகளைத் தூண்டிவிடும் என்றார் இயற்கையை வர்ணிப்பதற்காகவே இவ்வுலகில் பிறவியெடுத்தவர் என வர்ணிக்கப்பட்ட ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த்.

இயற்கையெழில்கள் எங்கெல்லாம் வியாபித்து இருக்கின்றனவோ அங்கெல்லாம் "புனித யாத்திரை" சென்று அவற்றை நேரில் கண்டு கவிதை பாடுவதையே உயிர்மூச்சாகக் கொண்டிருந்தவர் அவர்.

இயற்கையை மட்டும் அல்லாமல் உலகின் எழில் நகரங்கள் இயற்கை விநோதங்கள் பிற நாட்டு மக்களின் வாழ்வியல் முறைகள் இவற்றையெல்லாம் கூட சுற்றிப் பார்த்து மகிழ்வது என்றால் அது பொதுவாக உலகிலுள்ள ஒவ்வொரு மனிதருக்குமே பேரின்பக் குதூகலமாய் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதனால்தான் அத்தகைய சுற்றலாக்களை உல்லாசப் பயணங்கள் என அழைத்தார்கள்.

இத்தகைய உல்லாசப் பயணங்கள் மேற்கொள்கிற பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறதாம் மேற்கு ஜெர்மனியில்...!

கடந்த ஆண்டில் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணங்கள் மேற்கொண்ட ஜெர்மனியர்கள் அதற்காக மொத்தம் செலவு செய்த பணம் அவர்கள் நாணயக் கணக்குப்படி நாலாயிரத்து நானூறு கோடி மார்க் எனக் கூறப்படுகிறது.

அதாவது ஒரு குடும்பத்துக்கு சராசரி 1675 மார்க் சுற்றுப் பயணச் செலவு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஜெர்மனிய சுற்றுப் பயணிகளில் 17 சதவீதம் பேர் இத்தாலியிலும் 16 சதவீதத்துக்கும் சற்று கூடுதலானோர் ஆஸ்திரியாவுக்கும் 13 சதவீதம் பேர் ஸ்பெயினுக்கும் 8 சதவீதத்தினர் பிரான்ஸுக்கும் 7 சதவீதத்தினர் சுவிட்சர்லாந்துக்கும் சென்ற ஆண்டில் சென்று வந்தனர்.

இத்தாலிதான் அதிக ஜெர்மனிய பயணிகளை கவரும் நாடாக 1985 முதல் இருந்துவருகிறதாம்.

# பெற்ற சுதந்திரத்தை பேணி காக்கவேண்டியது நம்கடன்

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியில் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இலங்கை மக்கள் வாழ்ந்த காலம்- இலங்கை வரலாற்றில் குழப்பமும், பீதியும் நிறைந்த காலம் அது-

மக்களது உணர்வுகள், தேசிய எண்ணம், அவர்களது சிந்தனைத் திறன் ஆகிய அடிப்படை உணர்வுகளை வளர்ச்சியுறச் செய்யாமல் அவர்களை அடக்கி ஆட்சி நடத்தினான் வெள்ளைக்காரன்-

பழைய இந்தத் தகவல்களில் என்னை காணாமலாக்கி விட் டேன்-

எந்த விஷயத்திலும "டபுக்" கென முந்திச் செல்லாத ஒரு தன் னடக்கம, ஒதுங்கியிருக்கும ஒரு வித பணிவு கலந்த பக்குவம பித் தனான நீண்ட காலமாக "மறை த்தே" வைத்திருந்தன-

"எந்த வர்ணம பிடிக்கும?" என்ற என் வினாவுக்கு "எனக்கு இதுதான் பிடிக்கும; இது பிடிக் காது என்றில்லை- ஐஸ்பழம, கிரீம தவிர, எனக்கு உணவிலும அலர்ஜி இல்லை" என்றவர் வாழைச்சேனையிலிருந்து முன்னர் வெளியான "மின்னல்" என்ற சிற் றேடு ஒரு பேட்டி மூலம எனது அன்றைக்கால கையற நிலையின் பின் மீது வெளிச்சமிட்டுக் காட்டி யது" என்றார்-

"அமைச்சு தந்த இந்த பணப் பரிசிலுக்கு "மின்னல்" ஏட்டுக்கா ...

படவில்லையா? எனக் கேட்டேன்-

அதற்கவர் ஏமாற்றம கலந்த கீழ் தொனியில் "இல்லை" என பதிலிறுத்தார்- காரணம அவருக் குத்தானே தெரியும் என மழுப்பி விட்டார்-

கடைசியாக பித்தனிடம ஒரு பொருள் ஆதார கேள்வி கேட்க லானேன்-

"இந்த 7,000 ரூபா பணப் பரி சிலைக் கொண்டு என்ன செய்வ தாக உத்தேசம?" என்று அவரது மன ஓரத்தை துழாவிப் பார்த் தேன்-

"இந்த கஷ்டமான காலத்தில் இத்தொகையை வைத்து பிரம மாண்டமாக எதுவும் செய்ய முடி யாவிட்டாலும, இதைக் கொண்டு என் மனையாளுக்கு ஒரு நகையாப ரணம செய்து போடுவேன்- மிகு தியை பிள்ளைகளுக்காக செலவிடு வேன்" என்றதும என்னுள் "இவ் வளவு வயசுக்குப் பிறகு, இவரு க்கு மனைவிக்கு நகை செய்து போட்டு அழகு பார்க்கும இளமை ஆசை ஏன் வந்தது?" என்ற சந்தேகம எழுந்தது-

"நான் திருமணஞ் செய்த இவ் வளவு காலத்திற்குள் என் மனைவி யிடமிருந்த நகைகளை விற்றுச் சாப்பிட்டது தவிர இந்த 40வருட வாழ்வில் ஒரு மஞ்சாடி நகையே னும நான் என்னவளுக்கு செய்து கொடுக்காத குறையை, என் எழுத் துக்குக் கிடைத்த உழைப்பின் ஊதியமாகிய இத் தொகையிலிரு ந்து "காசுக்கு ஒரு சிறு பொட் டாவது" வாங்கிக் கொடுத்து ஈடு செய்ய நினைக்கிறேன்..." என்ற விளக்கம தந்ததும, நான் உருகிப் போனேன்- வாழ்வு ஒரு படைப் பாளியை எவ்வளவு கொடுமைப் படுத்துகிறது-

நாட்டுச் சிறுகதை மன்னனா கிய இந்த பித்தன், எழுத்தில் மட் டும புதுமைப் பித்தனின் வாரிசல்ல, வாழும் விதத்தாலும் இவர் ஒரு புதுமைப் பித்தன் தான் இந்த பித் தனை நம இலக்கிய உலகம இன்ம கண்டு கொண்டது போது மானதுதானா? சிந்திப்பீர்களா?

முன்னர் பிரசுரமான பித்தனின் சிறுகதைகளை தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட இலக் கிய நெஞ்சங்கள் முன்வர வேண் டும, இந்த பித்தனுக்கு செய்யும நன்றி ... இந்நாட்டு தமிழ் இலக்கியத்திற்கு செய்யும ... அதே வேளை பித்தனின் சிறுகதையை இன்றைய பத்திரிகைகள் பிர சுரம செய்வதில், எழுத்தாள ரான இளந்தலைமுறையினருக்கு இந்த சிறுகதையை இனம் காணச் சந்தர்ப்பம தருவதாகுமல்லவோ!

## பிள்ளைகள்...

(12 ஆம பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் துரைமார்களின் ஒத் துழைப்பு எப்படித் தேவையோ

# 2000 ஆம் ஆண்டே வருக

கி பி 2000ஆம ஆண்டு பிறக் கும நாளான புத்தாண்டு தினத் தைக் கொண்டாட இப்பொழுது முதலே பல முன்னேற்பாடுகளைச் செய்யத் துவங்கி விட்டது ஒரு அமைப்பு.

அந்த அமைப்புக்குப் பெயர், மில்லினியம சொசைட்டி. ஆறாயிரம உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பு, உலகின் தொன்மையான பிர மிட்டுக்களை விழா நாளன்று பயன்படுத்த இப்பொழுதே வாடகைக்கு "புக்" செய்து கொண்டுள்ளது.

2000ஆம ஆண்டு, அமெரிக்கா வின் முன்னாள், இந்நாள் அதிபர் களான ஜோர்ஜ் புஷ், றொனா ல்ட் றேகன் ஆகிய இருவருக்கும வயது 88 ஆக இருக்கும.


மார்கரெட் தாட்சர், பெனா சிர் பூட்டோ, நெல்சன் மண் டேலோ ஆகியவர்களுக்கும அழைப்பு அனுப்பியுள்ளனர். எண்பது வயதைக் கடந்த அநேக முக்கிய புள்ளிகள், விழாவில் கலந்து கொள்ள இசைவு தெரி வித்துள்ளனர்.

16ஆவது நூற்றாண்டில் வாழ் ந்த நோஸ்டராடாமுஸ் என்ற மதியூகி நிமித்திரன் உலகம 1990 ஆம ஆண்டு அழிந்துவிடும என்று சொல்லி விட்டுப் போயிருக்கி றான் என்பதையும மில்லினியம சொசைட்டி கணக்கில் எடுத்துக் கொண்டு, நமபிக்கையுடன் ஏற்பாடுகளை கவனித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-10)


# தீர்க்கமான தூர திருஷ்டியுடன்

## உங்கள் கட்டுப் பணத்தை முதலீடு செய்து...



ஆசிரியர் திரு டொமினிக் ஜீவா வும், காலஞ்சென்ற திரு தே டேனியலுமாவர்—

பழைய நினைவுத் தகவல்களில் என்னை காணாமலாக்கி விட்டேன்—

எந்த விஷயத்திலும் "லபக்" கென முந்திச் செல்லாத ஒரு தன்னடக்கம். ஒதுங்கியிருக்கும் ஒரு வித பணிவு கலந்த பக்குவம் பித்தனான நீண்ட காலமாக "மறைத்தே" வைத்திருந்தன—

"எந்த வர்ணம் பிடிக்கும்?" என்ற என் வினாவுக்கு, "எனக்கு இதுதான் பிடிக்கும்; இது பிடிக்காது என்றில்லை— ஐஸ்பழம், கிரீம் தவிர, எனக்கு உணவிலும் அலர்ஜி இல்லை" என்றவர் எழுமைச்சேனையிலிருந்து முன்னர் வெளியான "மின்னல்" என்ற சிற்றேடே ஒரு பேட்டி மூலம் எனது அன்றைக்கால கையறு நிலையின் பின் மீது வெளிச்சமிட்டுக் காட்டியது" என்றார்—

"அமைச்சு தந்த இந்த பணப்பரிசிலுக்கு "மின்னல்" ஏட்டுக்காரர்களையும், சாந்திமுகிதீன் — மேமன்கவி போன்றோரையும் அமைச்சர் திரு தேவராஜையும் என்னால் மறக்க முடியாது" என்றார் நன்றிப் பெருக்குடன்...

அண்மையில் மலேஷியாவில் இலங்கைத் தூதுவராகப் பதவியேற்று செல்லவுள்ள முன்னாள் இந்து சமய கலாசார, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு ராஜதுரையுடன் இணைந்து, இந்த பித்தன் "லங்கா முரசு" என்றொரு ஏட்டினை நடத்திய விவரத்தை அவரே கூறினார்—

இந்த ஏட்டில் நான் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு முன்பு பல எழுத்தாளர்களுக்கு பண முடிப்பு கொடுத்து கௌரவித்தாரே, நீங்கள் கௌரவிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று சொன்னதும் ... இய இந்த பித்தன், எழுத்தில் மட்டும் புதுமைப் பித்தனின் வாரிசல்ல, வாழும் விதத்திலும் கூட ஒரு புதுமைப் பித்தன் தான் இந்த பித்தனை நம் இலக்கிய உலகம் இன்னும் கண்டு கொண்டது போதுமானதுதானா? சிந்திப்பீர்களா?

முன்னர் பிரசுரமான பித்தனின் சிறுகதைகளை தேடிப்பிடித்து ஒரு தொகுதியாக வெளியிட இலக்கிய நெஞ்சங்கள் முன்வர வேண்டும் இது பித்தனுக்கு செய்யும் நன்றி மட்டுமல்ல, இன்னொரு தமிழ் இலக்கியத்திற்கு செய்யும் பேருபகாரமாகவும் அமையும். அதே வேளை பித்தனின் சிறுகதைகளை இன்றைய பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்யலாம், எதிர்காலமான இளம் தலைமுறையினருக்கு சிறந்த சிறுகதைகளை இனம் காணச் சந்தர்ப்பம் தருவதாகுமல்லவா!

## தேசியக் கொடி...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் ஹங்கேரிய மக்களை காப்பார் என்ற மன்னனை வாழ்த்தாமல் மக்களைப் புகழ்கிறது ஹங்கேரிய பாடல்—

நம்பிக்கை உண்டு என்று கூறுகிறது இஸ்ரவேல் தேசிய கீதம்,

"ஆம் நாட்டை நேசிப்போம்" என்று நோர்வே பாடலும் தொடங்குகிறது—

போலந்தை கைவிட மாட்டோம் என்பது போலந்து தேசிய கீதம்—

பெரு நாட்டுப் பாடல் "நாங்கள் விடுதலைப் பெற்றோம்" என்பதாகும்—

வங்காள தேசம் "தங்க வங்கமே நாம் நேசிக்கிறோம்" என்ற தொடக்கத்தை உடையதாகும்—

இந்திய தேசிய கீதம் 52 நிமிஷம் பாடக் கூடியதாகும்— அதை சுருக்கி 20 நிமிஷத்தில் பாடுகிறார்கள்—

(ம)

## பிள்ளைகள்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் துரைமார்களின் ஒத்துழைப்பு எப்படித் தேவையோ அதே போல கல்வித் தராதரமும் உடையவராதல் முக்கியம் ஒரு தொழில் சம்பந்தமாக ஒரு முகவரைச் சந்திக்கும் போது கணிதம், ஆங்கிலம் சிங்களம் போன்ற பாடங்களைப் பற்றி மிகவும் ஆழமாகக் கேள்விகளைத் தொடுப்பார்கள்—

அதற்கேற்ற கல்வித்தரம் இன்றேல் நாம் ஒதுக்கப்படுகிறோமென கூச்சலிடுவதில் அர்த்தமுமில்லை எனவே கல்வியை மேற்கொண்டாலும் கூட தராதரப் பரீட்சைகளில் தேவையான சித்திகளைப் பெறுவதற்கு அடிப்படையான கல்வியையும் தொடர்ந்து கல்வி கற்பதன் மூலமே பெற வாய்ப்புகளுண்டு—

க பொ த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த தன் பின்னரும், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தாலே டாக்டர்களும், என்ஜினியர்களும் உருவாக முடியும் என்பதை நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்— க பொ த (சா) அல்லது உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த தேவையான பெறு பேறுகள் கிடைக்காமல் நம் சமுதாயம் வளர்ச்சியடைய முடியாது— ஆகவே நம சமுதாய வளர்ச்சிக்கு கல்வித் தேவைகளை உணர்ந்த இடை நடுவில் கல்வி, தடைபடாமலும் தொடர்ந்து கல்வி கற்று உயர் தகைமைகளை பெற்று உரிய பங்கை மலையக மாணவர்கள் வகிப்பார்களாக—

மலையகத்தில் பிறந்த வளர்ந்த பெரிய கல்விமான்கள். பேராசிரியர்கள் உருவெடுத்தால் தான் இன்மை தொடரும் வருடங்களில் பல முன்னேற்றகரமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கலாம்!

மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளால் வருமானத்தை தேடிக் கொள்ளும் முயற்சியை விடுத்து கல்வியில் சிறந்த முன்னேற்றம் காண்போமாக!

(ம—ங)




சீரீசீ ஈகிள் ஆயுட் காப்புறுதியாளருக்கு

11.25% இலாபப்பங்கு வழங்குகிறோம்!

தொடங்கி 2 வருடங்கள் மட்டுமே.. இருந்தும், சீரீசீ ஈகிள், மேலும் உயர்ந்த உச்சங்களை எட்டிப் பிடித்து, அபேக்ஷா, பிரிபுன், தகக ஆயுட் காப்புறுதியாளர்களுக்கு. 11.25 இலாபப் பங்கை அறிவித்துள்ளது. திடமான, நீட்சண்ணியமான, அனுபவம் மிக்க கருடக் கண்ணோட்டத்தைத் தீர்க்கமாகச் செலுத்தி. தூரதிருஷ்டியுள்ள சீரீசீ ஈகிள், மீண்டும் உங்கள் கட்டுப் பணத்தைக் கவனமாக முதலீடு செய்து, மேலும் அதிக இலாபப் பங்கை உங்களுக்குச் சம்பாதித்துத் தருகிறது.

இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் பங்கீட்டு நடைமுறையின் கீழ், உங்கள் முதலீட்டிலிருந்து வழங்கக் கூடிய வருமானத்தின் 90% க்குக் குறையாத பங்கை, வருடாவருடம் மார்கழி 31-ந் தேதி உங்கள் முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கிறோம்

இவ்வாறு வரவு வைக்கப்படும் பணம், தொடர் வட்டி அடிப்படையில் வளர்ச்சி அடைந்து, காப்புறுதி முதிர்ச்சிக் காலத்தில் வழங்கப்படவிருக்கும் வரி விலக்குள்ள பணத் தொகையை மென்மேலும் பெருகச் செய்கிறது.

இவற்றுடன், ஒருவரில் தங்கியிருக்கும் குடும்பத்தவர்களுக்குப் பாதுகாப்பும், குறித்த தவணையில் முதிர்ச்சிக்காலப் பணம் வழங்கப்படும் உறுதியும், சீரீசீ ஆயுட்காப்புறுதியின் சிறப்பு அம்சங்களாகும்.

எங்கள் இறகின் கீழ் சேருங்கள்.
உங்களைக் காப்பதில் என்றும் கண்ணாய் இருப்போம்.

சீ.ரீ.சீ. ஈகிள்
இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்

ஈகிள் ஹவுஸ், 75, குமாரன் ரத்தினம் வீதி, கொழும்பு 2
தொலைபேசி: 421670/79/80/81 - 437090 - 6.



# மனையும் மங்கையும்

## மகளின் மனதை அறிந்து கொண்டு மணாளனைத் தேர்ந்தெடுங்கள்

பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுத்த பெண்ணை இப் பாரினிலே வளர்த்தெடுக்கின்ற அன்னையும், பிதாவும படாத பாடு படுகின்றார்கள். பெண் என்பவள் பெருமைக்குரியவளாக வாழவேண்டும. இது அன்னையின் கையிலேயே தங்கி நிற்கின்றது.

ஒரு தாய் தன் குழந்தையை (பெண்) பிள்ளைப் பருவத்திலிருந்தே பக்குவமாக வளர்த்தெடுத்து யௌவனப் பருவத்தில் மிகவும அவதானத்துடன் வளர்த்தெடுக்கின்றாள்.

அப்பிள்ளை பெரியவளானதும அவளுக்குரிய அனைத்து தேவைகளையும நிறைவேற்றுகின்றாள், வறுமையின் மத்தியில் பெற்றோர் இருந்த போதிலும பிள்ளையின் தேவையை நிறைவேற்ற முனைகின்றனர்.

இப்படியாக வளர்த்து எடுக்கின்ற பிள்ளையின் வாழ்க்கை முறையை மட்டும சீராக அமைத்துக் கொடுக்க அவர்களால் முடிவதில்லை. காரணம அவர்கள் இன்னும மூடநம்பிக்கையில் இருப்பவர்கள்.

தாங்கள் எப்படிப்பட்ட முறையில் மணக்கோலத்தை கண்டார்களோ அதேபோல் பிள்ளையையும மணக்கோலத்தில் காண ஆசைப்படுகின்றார்கள்.

— வே. புஷ்பலீலா —

இந்த நவீன காலத்தில் பெற்றோரும பிள்ளைக்கேற்றவாறு நவீனமானவர்களாக மாற வேண்டும. இதற்காக பிள்ளை கெட்ட வழியில் சென்றால் அதனை தட்டிக்கொடுப்பதல்ல,

ஒரு பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க வருகிறார்கள் என்றால் அவ்விஷயத்தை முன்னோடியாகவே பிள்ளையிடம சொல்லி வைத்திருக்க வேண்டும.

அதை விடுத்து மாப்பிள்ளை வீட்டாரா வீட்டுக்குள் வந்தபின் தேநீர் கொண்டு போகும்படி பணிப்பது தவறான காரியம. இது அப்பிள்ளைக்கு அதிர்ச்சியாக இருக்கும. இதனால் அவள் நடுங்கிக் கொண்டே தேநீரைக் கொண்டு போகும நிலை ஏற்படுகிறது.

மாப்பிள்ளை வீட்டார் போனதும பெண்ணிடம "மாப்பிள்ளை பிடித்திருக்கா" என்று கேட்பார்கள், ஆனால் அந்த இளம பெண் மாப்பிள்ளையை ஒழுங்காக பார்த்திருக்கவும மாட்டாது, அதுவும பெற்றோரே நேரடியாக கேட்க மாட்டார்கள்.

அதற்கும ஒரு "தரகர்" தாயிடம நேரடியாக கேட்டால ஏன நாங்கள பெற்ற பிள்ளை என்ன? பிள்ளையும "சரி" என்று கூறிவிட்டால, ஒரே அமர்க்களம தான். திடீரென மாப்பிள்ளை வீட்டார் வேறு இடம பார்த்து விட்டால் பெண்ணின் நிலை சற்று யோசித்துப்பாருங்கள்.

பிறகு இன்னொரு மாப்பிள்ளைக்கு "தேநீர்" கொண்டு போக வேண்டும. பெண் என்ன பொம்மையா? வருகிறவனுக்கெல்லாம தலையாட்டுவதற்கு ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டும என்று நினைத்தால் அப்பிள்ளைக்கு தெரியாமல் பொது இடங்களில் பார்க்கலாம.

அதனை விடுத்து ஒரு பெண்ணைக் கண்காட்சிப் பொருளாக பாவிப்பது சிறந்த தொன்றல்ல.

அடுத்த பெற்றோர் தன்

(24 ஆம பக்கம பார்க்க)

## பெண்களை மதித்திடாத வீட்டின்நிலை எத்தகையது?

பெண்களை மதிக்காத வீட்டில் நிலைமை எப்படி இருக்கும?

* எந்த வீட்டில் பெண்கள் அவமதிக்கப் படுகிறார்களோ, அங்கு எல்லாக் காரியங்களும அவலமாகும.

* எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ. அங்கு தேவதைகள் குடிகொள்கிறார்கள்.

* எந்த வீட்டில் மருமகள் துன்பப்படும நிலையில் வைக்கப்படுகிறாளோ, அந்த வீடு விரைவில் நசித்துப் போகும.

* துணைவன், மனைவி பரஸ்பரம என்றும மகிழ்ச்சியோடு இருக்கும வீட்டில், மங்களம நிலைத்து ஓங்கும்.

* காலையில் எழுந்தவுடன் பொட்டு வைத்துக் கொள்ளாத சுமங்கலி, தாய் தந்தையை வணங்காத பிள்ளை, குலதெய்வத்தை மறந்தவர்கள், தானே கிணற்றில் விழுபவர்கள் ஆகிறார்கள்!

(ம—10)

## பெருந்தன்மை கொண்ட மனைவி

கணவன் எத்தகைய கொடுமைகளைச் செய்தாலும அவற்றைச் சகித்துக் கொண்டு நல்வழி காட்டுபவளே பெருந்தன்மை கொண்ட மனைவி ஆவாள். அத்தகைய நல்ல மனைவி அமெரிக்காவிலும வாழ்கிறார்.

தன் கைகளாலேயே ஒருவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்த பின்னர் அந்நபர் மீண்டும "எழுந்தருளி" வந்தால் எப்படி இருக்கும? இப்படி ஒரு அனுபவம அமெரிக்க கணவர் ஒருவருக்கு வாய்த்தது. தனது மனைவியுடன் இவருக்கு சதா தகராறு. ஒரு நாள் கொலை வெறியுடன் தன் மனைவியின் குரல் வளையை ஆத்திரத்துடன் நெரித்திருக்கிறார், அவரது மனைவியின் விழி பிதுங்கி நாக்கு வெளியே தள்ளியது. கைகளை விட்டதும தொப்பென

மறைக்க முடியாது என்று கருதி பொலீஸுக்கு தகவல் தெரிவித்தார், பொலீஸார் வீடு வந்து பார்த்தபோது பிணத்தைக் காணவில்லை.

உண்மையில் மனைவி இறக்கவில்லை. மூச்சுத் திணறி மயக்கமடைந்து விழுந்திருக்கிறார், பின்னர் மயக்கம தெளிந்ததும வீட்டை விட்டு வெளியேறி மருத்துவ மனையொன்றில் சிராய்ப்புகளுக்கு மருந்து போட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கிறார். வீட்டில் பிணத்தைக் காணோமே என்று திகைத்துப் போயிருந்த பொலீஸாருக்கு காய்கறிக் கூடையுடன் பிணம வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டதும மயக்கமே வராத குறைதான்.

ஆனால் மனைவியோ கணவனின் நடத்தையை பெரிய மனது பண்ணி மன்னித்து விட்

## குடும்பத் தலைவிகளுக்கு பயனுள்ள குறிப்புகள்

* அடுப்பில் வைத்த பாத்திரத்தில் அதிகமாகக் கரி பிடித்து விட்டதா? கரி பிடித்த பாத்திரத்தை, அதை விட ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அப்படியே இறக்கிவிடுங்கள், கொஞ்சம நேரம கழித்துப் பாருங்கள். கரி தண்ணீரில் ஊறி கழன்று மிதப்பதைக் காண்பீர்

உறைப்பு கூடிவிட்டதா? தண்ணீரை ஊற்றி பெருக்கி சமாளிக்க முனையாதீர்கள். எலுமிச்சம்பழத்துளிகள் ஐந்து, ஆறுடன் ஒரு சிட்டிகை உப்பையும சேர்த்து விடுங்கள். காரம குறைந்து ருசியாக இருக்கும.

* புத்தம புதிதாக வாங்கும பிளாஸ்டிக் பாத்திரத்தில் ஒருவித

மணி நேரம கழித்து அந்தப் பாத்திரத்தைக் கழுவினால் நெடி பறந்து விடும.

* கிறீன்பீஸ் வாங்கும போது பச்சைப் பசேல் என்று பார்க்கவே அழகாக இருக்கும. ஆனால் அதைச் சமைத்துவிட்டுப் பார்த்தால் அந்தப் பச்சை நிறம மாறாது அப்படியே இருக்கும.

* மலிவான காலத்தில் நிறைய எலுமிச்சம பழங்களை வாங்கி விட்டீர்களா? ஒரு துணியை நனைத்து எலுமிச்சம பழங்களை அதில் போட்டு சுற்றி வைத்து விடுங்கள். இடையிடையே சுற்றும் வைத்த துணி காய்ந்து போகும் போதெல்லாம் தண்ணீர் தெளித்து வாருங்கள். எலுமிச்சம பழங்களைச் சுற்றி வைக்க ஏற்ற துணி பழைய பனியன் துணிதான்.

* தயிர் கெட்டுப் போகாமல் நாற்றமடிக்காமல் இருக்க வேண்டுமானால் இரண்டு சுற்று

# கொண்ட மனைவி

கணவன் எத்தகைய கொடுமைகளைச் செய்தாலும் அவற்றைச் சகித்துக் கொண்டு நல்வழி காட்டுபவளே பெருந்தன்மை கொண்ட மனைவி ஆவாள். அத்தகைய நல்ல மனைவி அமெரிக்காவிலும் வாழ்கிறார்.

தன் கைகளாலேயே ஒருவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்த பின்னர் அந்நபர் மீண்டும் "எழுந்தருளி" வந்தால் எப்படி இருக்கும்? இப்படி ஒரு அனுபவம் அமெரிக்க கணவர் ஒருவருக்கு வாய்த்தது. தனது மனைவியுடன் இவருக்கு சதா தகராறு. ஒரு நாள் கொலை வெறியுடன் தன் மனைவியின் குரல் வளையை ஆத்திரத்துடன் நெரித்திருக்கிறார், அவரது மனைவியின் விழி பிதுங்கி நாக்கு வெளியே தள்ளியது. கைகளை விட்டதும் தொப்பென கீழே விழுந்து அசைவற்று கிடந்தார் அவரது மனைவி.

தான் கொலை செய்து விட்ட உண்மையை அப்போது தான் உணர்ந்து கொண்ட கணவர், தனது குற்றத்தை நீண்ட காலத்துக்கு மறைக்க முடியாது என்று கருதி போலீஸுக்கு தகவல் தெரிவித்தார், போலீஸார் வீடு வந்து பார்த்தபோது பிணத்தைக் காணவில்லை.

உண்மையில் மனைவி இறக்கவில்லை, மூச்சுத் திணறி மயக்கமடைந்து விழுந்திருக்கிறார், பின்னர் மயக்கம் தெளிந்ததும் வீட்டை விட்டு வெளியேறி மருத்துவ மனையொன்றில் சிராய்ப்புகளுக்கு மருந்து போட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கிறார். வீட்டில் பிணத்தைக் காணோமே என்று திகைத்துப் போயிருந்த போலீஸாருக்கு காய்கறிக் கூடையுடன் பிணம் வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டதும் மயக்கமே வராத குறைதான்.

ஆனால் மனைவியோ கணவனின் நடத்தையை பெரிய மனது பண்ணி மன்னித்து விட்டார். சின்ன தப்பபிப்ராயம், அவ்வளவுதான் என்று சொல்லி, போலீஸாரை அனுப்பி விட்டார்! மனைவியின் பெருந்தன்மையை உணர்ந்து கொண்ட பின்னராவது கணவர் ஒழுங்காக நடந்து கொள்வாரா?

(ம-032)

அப்பிள்ளைக்கு அதிர்ச்சியாக இருக்கும். இதனால் அவள் நடுங்கிக் கொண்டே தேநீரைக் கொண்டு போகும் நிலை ஏற்படுகிறது.

மாப்பிள்ளை வீட்டார் போனதும் பெண்ணிடம் "மாப்பிள்ளை பிடித்திருக்கா" என்று கேட்பார்.

மகிழ்ச்சியோடு இருக்கும் வீட்டில், மங்களம் நிலைத்து ஓங்கும்.

* காலையில் எழுந்தவுடன் பொட்டு வைத்துக் கொள்ளாத சுமங்கலி, தாய் தந்தையை வணங்காத பிள்ளை, குலதெய்வத்தை மறந்தவர்கள், தானே கிணற்றில் விழுபவர்கள் ஆகிறார்கள்!

(ம-10)

எத்தகையது?

# குடும்பத் தலைவிகளுக்கு பயனுள்ள குறிப்புகள்

* அடுப்பில் வைத்த பாத்திரத்தில் அதிகமாகக் கரி பிடித்து விட்டதா? கரி பிடித்த பாத்திரத்தை, அதை விட ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அப்படியே இறக்கிவிடுங்கள். கொஞ்சம் நேரம் கழித்துப் பாருங்கள். கரி தண்ணீரில் ஊறி கழன்று மிதப்பதைக் காண்பீர்கள். இதனால் பாத்திரத்தைக் கழுவும் சிரமும் குறையும், சோப்பும் அதிகமாக செலவாகாது.

* நாக்கையே பிடுங்கும் அளவுக்கு கறி, குழம்பில் உறைப்பு கூடிவிட்டதா? தண்ணீரை ஊற்றி பெருக்கி சமாளிக்க முனையாதீர்கள். எலுமிச்சம்பழத் துளிகள் ஐந்து, ஆறுடன் ஒரு சிட்டிகை உப்பையும் சேர்த்து விடுங்கள். காரம் குறைந்து ருசியாக இருக்கும்.

* புத்தம் புதிதாக வாங்கும் பிளாஸ்டிக் பாத்திரத்தில் ஒருவிதமான நெடி அடிக்கும், அந்த நெடியைப் போக்குவதற்கு ஒரு வழியுண்டு. வெந்நீரில் கொஞ்சம் உப்பைப் போட்டுக் கரைத்து சூட்டோடு சூடாக ஊற்றி வைத்து விடுங்கள், அரை மணி நேரம் கழித்து அந்தப் பாத்திரத்தைக் கழுவினால் நெடி பறந்து விடும்.

* கிறீன்பீஸ் வாங்கும் போது பச்சைப் பசேல் என்று பார்க்கவே அழகாக இருக்கும். ஆனால் அதைச் சமைத்துவிட்டுப் பார்த்தால் அந்தப் பச்சை நிறம் வெளிறிப் போய் விடும். நீங்கள் சமைக்கும் கறியிலும் அந்தக் கிறீன்பீஸ் பச்சைப் பசேல் என்று காட்சிதர வேண்டுமா? கிறீன்பீசை வேக வைக்கும் பொழுது ஒரு கரண்டி சீனியைப் போட்டு விட்டால் அந்த நிறம் மாறாது அப்படியே இருக்கும்.

* மலிவான காலத்தில் நிறைய எலுமிச்சம் பழங்களை வாங்கி விட்டீர்களா? ஒரு துணியை நனைத்து எலுமிச்சம் பழங்களை அதில் போட்டு சுற்றி வைத்து விடுங்கள். இடையிடையே சுற்றி வைத்த துணி காய்ந்து போகும் போது தண்ணீர் தெளித்து வாருங்கள். எலுமிச்சம் பழங்களைச் சுற்றி வைக்க ஏற்ற துணி பழைய பெனியன் துணிதான்.

* தயிர் கெட்டுப் போகாமல் நாற்றமடிக்காமல் இருக்க வேண்டுமானால் இரண்டு கீற்றுத் தேங்காயை வெட்டிப் போடுங்கள்.

* திடீர் மோர் தயாரிக்க வேண்டுமா? காய்ச்சி எடுத்த பாலில் ஒரு துளி எலுமிச்சம் பழச்சாறும் ஒரு சிட்டிகை உப்பும் போடுங்கள். உறை மோருக்கு அக்கம்பக்கம் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு அலைய வேண்டிய அவசியம் இல்லை.


* தோசை, இட்லி, புளிப்பு அதிகமாகிப் போகாமலிருக்க வேண்டுமானால் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, மாப் பாத்திரத்தை அதற்குள் இறக்கிவிடுங்கள். அத்தோடு வாழை இலைக் கீற்று இரண்டைக் கிழித்துப் போடுங்கள்.

* உடைத்த தேங்காய் கெட்டுப் போகாமலிருக்க உப்புத் தூளை தடவி வைத்து விடுங்கள், அல்லது உப்புத் தண்ணியை பூசி வைத்து விடுங்கள். அத்தோடு மறக்காமல் அந்தத் தேங்காய் மூடியை கவிழ்த்து விடுங்கள்.

* வாழை இலையை நெருப்பில் வாட்டி சாப்பாடு கட்டப் போகிறீர்களா? வாழையிலையின் நாற்றம் வராதிருக்க என்ன செய்ய வேண்டும் தெரியுமா? வாழையிலையை வாட்டிய பின்னர் அந்த இலையை உப்புத் தண்ணீரால் கழுவித் துடைத்து விட்டு உணவைப் பொட்டலமாகக் கட்டுங்கள், இலை மணமகாது.

— திருமதி ரா சந்திரன்

# பின்னழகு காட்டி பிறரை கவர்ந்திழுக்க தெரியுமா?



ஒரு பெண்ணின் முகலட்சணத்தைப் பார்த்து மயங்குவது ஆடவர்களின் கலாரசனை ஆகும், ஆனால் தங்கள் முதுகழகைக் காட்டிப் பிறரைக் கவர்ந்திழுக்கவும் பெண்களால் முடியும். இதோ ஒரு பின்னழகு சிங்காரி தனது முதுகை விதம் விதமாக அலங்கரித்து அழகுக் கோலம் காட்டுகிறார்.

(ம)

MOTHER & CHILD

# தாயும் சேயும்

## வேண்டாத மகனை சட்டப்படி தூக்கி வீசிய பெற்றோர்

மகனின் எல்லை மீறிய குறும்புகளைத் தாளமுடியாத பெற்றோர் பிரிட்டிஷ் நீதிமன்றத்தின் மூலம் சட்டப்படி தமது மகனுடனான தொடர்புகளை அறுத்துக் கொண்டார்கள். 14 வயதான குறும்புக்கார சிறுவன் தன் 13 ஆம் வயதில் ஒரு குழந்தைக்குத் தந்தையானான் என்றால் எப்படித்தான் பெற்றோரும் பொறுத்துக் கொள்வார்கள்!

தன் மகனுடனான உறவுகளைத் துண்டித்துக் கொள்ளும் வகையில் நீதிமன்றத்தில் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதியரசரும் ஏற்றுக் கொண்டு, ஜெப் என்ற பெயர் கொண்ட அச்சிறுவனின் பெற்றோர் என்ற அந்தஸ்தில் இருந்த அவ்விருவருக்கும் விடுதலை அளித்தார்,

வின்ஸ்டன் அடம்ஸ் என்னும் மற்றோரு தந்தை தனது மகனுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் எதிர்பார்த்த வெற்றி கிட்டாததால் கடும் கோபத்துக்குள்ளானார், ஏனெனில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சீர்திருத்த நிலையத்தில் சில நாட்கள் இருந்து விட்டு வந்தால் போதும் என லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது,

இவருடைய மகன் டொம் தன் தந்தையிடம் பணம் கேட்டிருக்கிறார். அவர் மறுத்துவிட பலாத்காரமாக பணத்தையும் சில குடும்பப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு தந்தையின் காரிலேயே ஏறி பறந்து விட்டார் டொம்! இதைத் தொடர்ந்த கடும் ஆத்திரமுற்ற தந்தை மகனை எப்படியாவது சிறையில் தள்ளி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நீதிமன்றம் ஏறினார். ஆனால் பலிக்கவில்லை. (ம-ரே2)

## அடக்கமுள்ள தோற்றமே அழியாத பெருமை தரும்

சில பெண்களை எல்லோரும் புகழ்ந்து பேசுகிறார்கள், பலரை எல்லோரும் வெறுக்கிறார்கள், காரணம் என்ன?

கண்ணாடியில் தோன்றும் உருவம் போன்றது நம் வாழ்க்கை, நாம் சிரித்தால், அது சிரிக்கிறது. நாம் அழுதால் அது அழுகிறது. நாம் முறைத்தால் அதுவும் முறைக்கிறது. நாம் கொஞ்சினால் அதுவும் கொஞ்சுகிறது.

இப்படித் தான் உலகமும் இருக்கிறது. நாம் எப்படி மற்றவர்களிடம் நடந்து கொள்கிறோமோ, அப்படித் தான் மற்றவர்களும் நம்மிடம் நடந்து கொள்வார்கள்.

சில பெண்கள் தங்கள் தோற்றத்தினாலே பிறரால் நல்லவர்களென்றோ கெட்டவர்கள் என்றோ மதிக்கப்படுகிறார்கள்.

சிலர் இயற்கையிலே நல்ல தோற்றமுள்ளவர்களாக இருக்கிறார்கள் "நல்ல தோற்றம் பாதி மதிப்பைத் தரும்" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி—

நல்ல தோற்றம் இல்லாதவர்கள் தங்கள் நல்ல வார்த்தையினாலும், நல்ல செய்கையினாலும் பிறர் மதிப்பைப் பெறவேண்டும்

**— நஸ்லியா புஹாரீன் —**

நல்ல செய்கையும் நல்ல பேச்சும் எல்லோருக்கும் பெருமையைத் தேடித் தரும்.

பெண்கள் தாம் தங்கள் தோற்றத்தில் மிக மிக அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சில பெண்களை பார்த்தவுடனே யோக்கியர்கள் மனதிலும் கெட்ட எண்ணம் உண்டாகின்றது.

சில பெண்களைப் பார்த்தவுடன் மரியாதையும், மதிப்பும் தோன்றுகிறது. காரணம் "பெண்களின் அடக்கமான தோற்றம் ஆண்களின் மனதில் மரியாதையான எண்ணத்தையும், அடக்கம் இல்லாத தோற்றம் வேறு விதமான எண்ணத்தையும் உண்டாக்கலாம்.

பெண்கள் எப்போதும் அடக்கமுள்ளவர்களாகவே இருக்க வேண்டும்.

ஆண்களைப் பார்க்கிலும் பெண்களுக்குத் தான் கட்டுப்பாடு மிகு மிக அதிகம் அவசியம் தேவை.

உலகம் பெரும்பாலும் வெளித் தோற்றத்தைக் கொண்டே ஒருவரை மதிக்கின்றது. வெளித் தோற்றத்தைக் கொண்டே நல்லவர்களென்றோ, கெட்டவர்களென்றோ பலர் பிறரை நினைக்கிறார்கள்.

ஆகவே தோற்றத்தினாலும், பேச்சினாலும் பெண்கள் எப்போதும் பிறர் மனதில் நல்லெண்ணம் உண்டாகும்படி நடந்து கொள்ளவேண்டும்.

எனவே பெண்கள் உடையினாலும் நடையினாலும் வார்த்தையினாலும் தானும் அடக்கமாக இருந்து கொண்டு, பிறருக்கும் இவ்வாறு அறிவுறுத்தல்களை எடுத்துரைக்க வேண்டும். (த)



அப்பா எனக்கு வாங்கி வந்த
அழகு மோட்டார் பைக்
கினிலே
தொப்பி ஒன்றை அணிந்து
கொண்டு
ஏற்றி விட்டேன்—
இலேசாக
எப்போ பழகினீர்கள்? என
எவரும் கேட்டால் என்
சொலலாம்?
செப்பத் தானா தெரியாது?
தெரியும் வகையில் "எல்"
இருக்கே

—த. மனோஜ்

## குற்றவாளியை மடக்கிப் பிடிக்க ஒன்று திரண்டனர் வீரப் பெண்கள்

ஆண்கள் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் பொது இடத்தில் துணிந்து ஒரு காரியத்தை செய்யத் தயங்குவார்கள். பொது மக்கள் ஒத்துழைப்பு இல்லாததால்தான் பலே கேடிகள் பயமின்றி திரிகின்றனர். ஆண்களும் செய்யத் தயங்கும் செயலில் பம்பாயை சேர்ந்த 4 பெண்கள் இறங்கி பலே கேடியை பிடிக்க பொலீஸுக்கு உதவி உள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலத்தில் பல கொலை, கொள்ளைகளை நடத்தி விட்டு பம்பாய் வந்தவன்

4 பெண்கள் இவனை பிடித்து கொடுத்தனர்.

இந்த 4 பெண்களும் இவனிடம் தங்க நகைகள், பணத்தை பறிகொடுத்தவர்கள். இந்த 4 பேரையும் பொலீஸாரும் நீதிபதியும் பாராட்டினார்கள்.

அவர்கள்தான் கலா கஜ்ரே (32), பிரபா (22), கூமி ஜகாங்கீர் (62), ஆஷா கிரன் (37).

இவர்களில் ஜகாங்கீர் 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி மின் ரயிலில் பயணம் செய்தாள். பெண்கள் பெட்டியில் யாருமில்லை. மரைன் லைன் நிலையத்தில் நின்றுவிட்டு ரயில் [illegible]

தாள் அவள். அடுத்து வந்த சர்ச் கேட் நிலையத்தில் வண்டி நிற்கு முன்பு பிளாட்பாரத்தில் தாவிய தாகூரை ஜகாங்கீர் தேடினாள். பலனில்லை. ஜனத்திரளில் கலந்து விட்டான்.

அரசுத்துறை நிறுவனத்தில் அதிகாரியாக இருப்பவள் கலா கஜ்ரே. வேலையை முடித்துவிட்டு விலி-பார்லே நிலையத்தில் ரயில் பிடித்து சர்ச் கேட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அது முதல் வகுப்பு பெண்கள் கம்பார்ட்மென்ட். மணி பிற்பகல் 3-45. மரைன் லைன் நிலையத்தில் எல்லாரும் இறங்கி விட்டனர்.

## அவசியமான நேரத்திலும் பெண் மௌனமாக இருக்கலாமா?

பழக்கும் நட்பு என்றதன் அரிய அருமையான சொல்லின் பின்னணியாக நாம் பலருடன் பலவிதத்திலும் உறவு கொள்ள நேரிடுகிறது—

இதன் நிமித்தம் நமது குடும்ப நிலைமை – மனநிலைமை – எதிர்

அக்கா என்று வந்தவருடன் இருப்போர் பலரும் பேச முற்பட்டால் அல்லது பேசாமலேயே இருந்தாலும் கூட குறிப்பிட்ட இருவருக்குமுள்ள அந்தரங்கங்கள் மற்றும் அவசியமான செய்திகள் பேசுவதற்கு இடைஞ்ச

செய்யும்— இதனைத் தவிர்க்க முடியாது—

சில நேரங்களில் இப்படிக் கதைப்பதில் அவர் ஆணோ பெண்ணோ நாகரீகமில்லாத வெட்கமற்ற ஏன் இங்கிதம் புரியாதவராகவே கணிக்கப்படுவர்

நீக்கப்படல் வேண்டும்—

பெண்ணானவள் அளவோடு பிள்ளை பெறுவது மட்டுமல்ல அளவுடனேயே பேசவும் பழக தெரிய வேண்டும்— எந்த நேரமும் வளவளவென்று கதைகளை அளப்பதில் சக்தியை இழப்

கேட்டிருக்கிறார். அவர் மறந்துவிட பலாத்காரமாக பணத்தையும சில குடும்பப் பொருட்களையும எடுத்துக் கொண்டு தந்தையின் காரிலேயே ஏறி பறந்த விட்டார் டொம்! இதைத் தொடர்ந்த கடும ஆத்திரமுற்ற தந்தை மகனை எப்படியாவது சிறையில் தள்ளி விடுவது என்று கங்கணம கட்டிக் கொண்டு நீதிமன்றம ஏறினார். ஆனால் பலிக்கவில்லை. (ம-632)

சில பெண்கள் தங்கள் தோற்றத்தினாலே பிறரால் நல்லவர்களென்றோ கெட்டவர்கள் என்றோ மதிக்கப்படுகிறார்கள்.

சிலர் இயற்கையிலே நல்ல தோற்றமுள்ளவர்களாக இருக்... உள்ளவர்களாக இருக்க வேண்டும.

சில பெண்களை பார்த்தவுடனே யோக்கியர்கள் மனதிலும கெட்ட எண்ணம உண்டாகின்றது.

ஆண்களைப் பார்க்கிலும பெண்களுக்குத் தான் கட்டுப்... மாக இருந்து கொண்டு, பிறருக்கும இவ்வாறு அறிவுறுத்தல்களை எடுத்துரைக்க வேண்டும. (த)

இருக்கே

—த. மனோஜ்

# அவசியமான நேரத்திலும் பெண் மௌனமாக இருக்கலாமா?

பழக்கம் நட்பு என்றதன் அரிய அருமையான சொல்லின் பின்னணியாக நாம் பலருடன் பலவிதத்திலும் உறவு கொள்ள நேரிடுகிறது.

இதன் நிமித்தம் நமது குடும்ப நிலைமை - மனநிலைமை - எதிர்பார்ப்பு மற்றும் ஏமாற்றம் என்பவற்றைச் சுமாராகவும் சராசரியாகவும் ஏன் மேலதிகமாகவும பகிர்ந்து அமைதி கொள்ளும விதத்தில் பழக்கமானது அவரவரிடையே வலுப்பெற்று பல்லாண்டுகளாக தொடர்கிறது.

மானிடரின் பழக்க தோஷத்தில் ஒருவர் பால் ஒருவர் வீட்டிற்கு செல்லவும மீளவும் சந்தர்ப்பம அமையும் நிலையில் நாம தேடிப் போவோர் மனையில் இல்லாத சமயம் அங்கு ஒரு நிமிடமும் தரிக்கப் பிடிக்காது.

ஆமாம் தேவையானவர் அந்நேரம் இருந்து விட்டாலோ அதை விடச் சந்தோஷமுமிருக்காது.

அப்படியே இன்ப துன்பம் சங்கீத சந்தோஷம் யாவையுமே அலசி ஆராய்ந்து இன்புற்றிருக்கும வேளையில் அடுத்தவர் தலையீடு இங்கு அனாவசியமானது.

அதாவது வீட்டுக்குரியவர் ஒரு கல்வி அதிகாரி எனினும அவரின் மனைவி நான் - அம்மா நான் - அப்பா மகள் என்றும் இன்னும் யார் யாரோ என்றும் தானாக உரிமை கொண்டு வந்தவருடன் உரையாடுவது வரவேற்கக் கூடியதல்ல.

உரியவர் தன் உறவினர் பெற்றோரை அறிமுகம செய்தாலன்றி விருந்தினர் குறிப்பாக நண்பர்கள் விவகாரத்தில் அவர்கள் பேச்சு வார்த்தைகளிடையே கலந்து கொள்வது பிழையானதாகும.

இவ்வாறு அவரின் அண்ணன் சந்தர்ப்பங்களில் உருவாகவே

அக்கா என்று வந்தவருடன் இருப்போர் பலரும பேச முற்பட்டால் அல்லது பேசாமலேயே இருந்தாலும கூட குறிப்பிட்ட இருவருக்குமுள்ள அந்தரங்கங்கள் மற்றும அவசியமான செய்திகள் பேசுவதற்கு இடைஞ்சலாக இருக்கும்.

அத்தோடு உரையாடிக் கொண்டிருப்பவர் இளையவரானால் அதாவது தம்பி தங்கையானால் தமையன் தமக்கை இடையே புகும் போது மரியாதை வேறு கொடுக்க வேண்டும.

இதனால் நண்பர்கள் உரையாடல் கஷ்டத்திற்குள்ளாகி பின் தள்ளப்பட்டு இடையிலேயே முடிவடைந்து வீடு செல்ல வாய்ப்புண்டாகி விடும்.

எனவே உறவுகளில் மூத்தவர் பெரியவர் - இளையவரானாலும அவரவர் நட்புகளில் எவரும குறுக்கிடுவது நாகரீகமல்ல.

சிலருக்கு எல்லோருடனும் கலந்து பேசி சிரித்து தேடி வந்தவர் இல்லாத சமயமும வந்தவரை வரவேற்று அனுசரித்து ஆதரித்து அனுப்பக் கூடிய திறமை இருக்கலாம.

ஆயினும அதனை வைத்துக் கொண்டு ஏனையவரும அப்படியேயிருக்க வேண்டும என்று எதிர்பார்ப்பது தவறானதாகும.

அதை விட அவர்களின் பேச்சுவன்மை திறமை எல்லா வேளைகளிலும் எடுபடக்கூடியதாகவுமிருக்காது.

சாதாரணமாக ஒரு இளைஞனின் தங்கைக்கு (இளம் பெண்) அவன் நண்பனோடு இலேசாக சிரிக்க முடியும். ஆனால் பேச முடியாது.

ஆமாம். தங்கைக்கு மட்டுமல்ல தனயனுக்கு முடியாத ஒரு இக்கட்டான நிலை அப்படியான

செய்யும். இதனைத் தவிர்க்க முடியாது.

சில நேரங்களில் இப்படிக் கதைப்பதில் அவர் ஆணோ பெண்ணோ நாகரீகமில்லாத வெட்கமற்ற ஏன் இங்கிதம புரியாதவராகவே கணிக்கப்படுவர்.

இப்படியான செயற்பாடுகள் அதாவது வந்தவர் எவரானாலும உரையாடி மகிழ்வது ஒரு வேளை பேசி கதையாலேயே காலத்தைக் கடக்கும் ஒரு சில பெண்கள் ஆடவருக்கு பொருந்தினாலும அது முற்று முழுதாக நீக்கப்படல் வேண்டும.

பெண்ணானவள் அளவோடு பிள்ளை பெறுவது மட்டுமல்ல அளவுடனேயே பேசவும் பழக தெரிய வேண்டும. எந்த நேரமும வளவளவென்று கதைகளை அளப்பதில் சக்தியை இழப்பதில் பிரயோசனமேயில்லை.

மௌனத்தில் பேரழகே பொதிந்திருக்கும் என்றாலும் அவசியமான நேரத்திலும மௌனமாயிராது அளவோடு பேசி சிரித்து இருக்கும் வரை நல்ல பேர் பெற்று ஈடேறுக.—(த)

—சசிகலா செல்லத்தம்பி—

# குற்றவாளியை மடக்கிப் பிடிக்க ஒன்று திரண்டனர் வீரப் பெண்கள்

ஆண்கள் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும பொது இடத்தில் துணிந்து ஒரு காரியத்தை செய்யத் தயங்குவார்கள். பொது மக்கள் ஒத்துழைப்பு இல்லாததால்தான் பலே கேடிகள் பயமின்றி திரிகின்றனர். ஆண்களும செய்யத் தயங்கும செயலில் பமபாயை சேர்ந்த 4 பெண்கள் இறங்கி பலே கேடியை பிடிக்க பொலீஸுக்கு உதவி உள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலத்தில் பல கொலை, கொள்ளைகளை நடத்தி விட்டு பமபாய் வந்தவன் பயங்கர குற்றவாளி தாகூர். புறநகர் ரயில்களில் பெண்கள் பெட்டியில் நுழைந்து, பெண்ணிடம கத்தி முனையில் கொள்ளையடித்து வந்த இவனை பிடிக்க முடியாமல் பொலீஸார் திணறிய நேரத்தில், திரத்துடன் முன்வந்து 4 பெண்கள் இவனை பிடித்து கொடுத்தனர்.

இந்த 4 பெண்களும இவனிடம தங்க நகைகள், பணத்தை பறிகொடுத்தவர்கள். இந்த 4 பேரையும பொலீஸாரும நீதிபதியும பாராட்டினார்கள்.

அவர்கள்தான் கலா கஜ்ரே (32), பிரபா (22), கூமி ஜகாங்கீர் (62), ஆஷா கிரன் (37).

இவர்களில் ஜகாங்கீர் 1985 ஆம ஆண்டு பெப்ரவரி 17ஆம திகதி மின் ரயிலில் பயணம செய்தாள். பெண்கள் பெட்டியில் யாருமில்லை. மரைன் லைன் நிலையத்தில் நின்றுவிட்டு ரயில் கிளமபும போது எதிர் வாசல் வழியாக ஒரு உருவம நுழைந்தது.

அடுத்த நொடி ரிவால்வருடன் ஜகாங்கீர் முன் தாகூர் நின்றான். சத்தம போடக்கூட வழியில்லாமல் நகை, பணத்தை கொடுத்தாள் அவள். அடுத்து வந்த சர்ச்கேட் நிலையத்தில் வண்டி நிற்கு முன்பு பிளாட்பாரத்தில் தாவிய தாகூரை ஜகாங்கீர் தேடினாள். பலனில்லை. ஜனத்திரளில் கலந்து விட்டான்.

அரசுத்துறை நிறுவனத்தில் அதிகாரியாக இருப்பவள் கலா கஜ்ரே. வேலையை முடித்துவிட்டு விலி-பார்லே நிலையத்தில் ரயில் பிடித்து சர்ச் கேட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அது முதல் வகுப்பு பெண்கள் கமபார்ட்மெண்ட். மணி பிற்பகல் 3-45. மரைன் லைன் நிலையத்தில் எல்லாரும இறங்கி விட்டனர்.

பெட்டியில் கஜ்ரே மட்டும தான். உள்ளே தாவிய தாகூருக்கு தனது வேலையை முடிப்பதில் கஷ்டம இருக்கவில்லை. வெளியேறும போது அவனை கஜ்ரே அடையாளம கண்டு கொண்டாள்.

தாகூரிடம பணத்தை பறிகொடுத்த அடுத்தவர்கள் பிரபா, கிரன் இருவரும மாகிம ரயில் நிலையத்தில் இருந்து ரயில் கிளமபும போது உள்ளே நுழைந்தான் தாகூர்.

தாகூர் மிரட்டலுக்கு இரு பெண்களும அஞ்சவில்லை. தங்கச் சங்கிலியை தர மறுத்தனர். அபாய சங்கிலியை இழுக்க முயன்றனர். இருவருக்கும கத்திக் குத்து விழுந்தது. பிரபாவிடம மட்டுமே சங்கிலியை பறிக்க முடிந்தது. அதற்குள் அபாய சங்கிலியை கிரன் இழுத்த விட்டதால் தப்பியோடினான்.

இரு பெண்கள் கூச்சலிட்டதை அடுத்த பெட்டிகளில் இருந்த ஆண்கள் கவனித்தனர். இருந்தும தாகூர் ரிவால்வருக்கு பயந்து அவனை பின் தொடராமல் நின்று விட்டனர்.

இப்படி பல முறை இவன் ரயிலில் சங்கிலி பறித்து பொலீஸாரை கதி கலக்கி விட்டான். இவனது அடையாளமே தெரியாமல் இருந்ததால் இவனைப் பிடிப்பதில் பொலீஸார் மிகவும கஷ்டப்பட்டனர். அப்போது தான் இந்த 4 பெண்கள் மட்டும தைரியமாக தாகூரை அடையாளம காட்ட முன்வந்தனர்.

பமபாய் புறநகர் ரயில் நிலையங்கள் எல்லாவற்றிலும பொலீஸார் குவிக்கப்பட்டனர். தாகூரை 4 பெண்கள் உதவியுடன் பொலீஸார் சல்லடை போட்டு தேடி

(24ஆம் பக்கம பார்க்க)

# குழந்தைகளையும் எயிட்ஸ் விடவில்லை!

"எயிட்ஸ்" நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும, குழந்தைகள் பிறக்கும ஆனால் குழந்தைகள் வளர்ந்து ஆளாகும முன்னரே "எயிட்ஸ்" பெற்றோர்கள் இறந்து விடுவார்கள்.

எயிட்ஸ் நோய் கண்ட ஒரு ஆடவனுடன் தொடர்பு கொண்டு கருத்தரிக்கும நேரத்தில் எயிட்ஸ் கிருமிகள் தாயின் கர்ப்பப்பையில் புகுந்த விடுகின்றன என்று அண்மையில் நியூயோர்க் நகரில் மருத்துவ நிபுணர்களால் நடத்தப்பட்ட ஆய்வில் இத்தகவல் தெரியவந்திருக்கிறது.

172 குழந்தைகள் "எயிட்ஸ்" நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு பிறந்திருக்கின்றன. அவர்களில் சரியாக அரைவாசிக் குழந்தைகள் ஒரு வருடத்தில் எயிட்ஸ் நோயின் குணங்களைக் கொண்டிருந்தன. 10 குழந்தைகளில் எட்டு குழந்தைகள் பிறந்ததிலிருந்தே எயிட்ஸ் நோயின் குணங்களைக் கொண்டிருந்தன. எஞ்சியவை இரண்டு வருடங்களில் இறந்த விடுகின்றன.

அநேகமான பிள்ளைகள் மூன்று வயதிற்குள்ளேயே இறந்த விடுகின்றன.

"எயிட்ஸ்" நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோர், தடுப்பு மருந்துகளை உடலில் ஏற்றுவதுண்டு. இம்மாதிரியான பெற்றோருக்குப் பிறக்கும குழந்தைகளின் நீடிய ஆயுட்காலம பத்து வருடமே.

தடுப்பு மருந்துகளை பாவிக்காத பெற்றோரின் குழந்தைகள் சில மாதங்களில் இறக்கின்றன.

நியூயோர்க்கில் இதுபற்றிய ஆராய்ச்சிகளை நடத்திய டாக்டர் ஜீ ஸ்கொட்டு இதனை அறிவித்துள்ளார்.

சிறு குழந்தைகள் இவ்வியாதியினால் பாதிக்கப்படுவது கவலைக்குரியதாகும. குழந்தைகளை இக் கொடிய வியாதியிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

"எயிட்ஸ்" நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும பெற்றோருக்கு, பிறக்கும குழந்தைகளுக்கு வியாதி தோன்றாமலிருக்கலாம. ஆனால் அக்குழந்தைகளை மாதக்கணக்கில் அவதானித்து வர வேண்டும.

தாயின் கர்ப்பப்பையில் "எயிட்ஸ்" நோயின் கிருமிகள் தொற்றியிருக்கும, அத்துடன் அது இரத்தத்தில் ஊடுருவி விட்டால், சில சமயங்களில் தாய்க்கும குழந்தைக்கும ஆபத்தாகும.

மருத்துவக் கண்காணிப்பில் இருக்கும குழந்தைகளில் 50 சதவீதம மரணமடைந்துள்ளதாகவும் அவ்வறிக்கை கூறுகின்றது. (ம-455)

# சிந்தாமணி

தினவெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

CHINTAMANI சிந்தாமணி


## ஏழைக்கு உதவி

பசுவுக்குப் பிண்ணாக்குப் பொட்டு போன்ற தீவனங்களை வாய் வழியாக ஊட்டுகிறோம்– அது தன்னுடைய வயிற்றில் பாலைச் சுரந்து தருகிறது– அதைப் போல ஏழை எளிய மக்களுக்கு நாம் செய்யும் உதவி அவர்களிடமிருந்து கிடைக்காவிட்டாலும் மாற்று வழியாக அதன் பலன் நமக்கு வந்தே தீரும்– எனவே ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும்– [ம—10]



# மன்னன் ஆகும் யோகம் இல்லை!

இங்கிலாந்தை ஒரு கலக்குக் கலக்கி, பரபரப்பாக பேசப்பட்டு வரும் விடயம், இளவரசர் சார்ள்சின் ஜாதகக் குறிப்பு. இங்கிலாந்தின் பிரபல முக்கிய ஜோசியர்கள் அனைவரும் தங்கள் அனுபவம், திறமை அனைத்தையும் செலவழித்து, இளவரசரின் ஜாதகத்தை கணித்துள்ளனர்.

அரசி எலிஸபெத்துக்கு அடுத்தபடியாக, அரியணை ஏற வேண்டியவர் இளவரசர் சார்ள்ஸ். ஆனால், அனைத்து ஜோசியர்களின் கணிப்புப்படி. சார்ள்சின் ஜாதகத்தில், மன்னராகும் யோகமே இல்லையாம்!

சார்ள்சுக்கு ஆயுசு மிகவும் குறைவு என்று இங்கிலாந்தின் பெண் ஜோதிடர் பென்னி கூறியிருந்தார். மேலும், "சார்ள்ஸ், அவரது மனைவி டயானா மற்றும் இரு குழந்தைகளும், ஒரு பொது விழாவில் சுட்டுக் கொல்லப்படுவார்கள். இதைத் தொடர்ந்து, சார்ள்சின் தம்பி (சாராவின் கணவர்) பதவி ஏற்பார்" என்றும் அந்த அம்மணி சொல்லியிருந்தார்.

இன்னும் பல ஜோசியர்களுக்கும், பல்வேறு அனுமானங்கள். ஆனால், அவற்றை எல்லாம் வெளியே சொல்வதற்கு பயம். பென்னி மட்டும் துணிந்து தனது கருத்துக்களை சொல்லி விட்டார்.

இவரது கருத்துக்களின்படி, சார்ள்சுக்கு மன்னராகும் யோகம் இல்லை; ஆனால், தீர்க்காயுசு உண்டு. சார்ள்ஸ் — டயானா தம்பதியினரிடையே சுமுகமான உறவு கிடையாது. இவர்களிடையே உள்ள கருத்து வேற்றுமைகள் முற்றி இருவரும் பிரிந்து விடுவார்கள். சார்ள்சின் ஏற்றுக் கொள்ள முடியாத புரட்சிகரமான கருத்துக்களும், உடைந்து போன திருமண வாழ்க்கையுமே அவரை மன்னராக்க விடாமல் தடுத்து விடும். அதனால் அடுத்த மன்னர், சார்ள்சின் மூத்த மகன் வில்லியம் தான் என்பது பென்னியின் கணிப்பு!

இவரது ஜாதகத்தில் உள்ள கிரகங்களின் நிலைப்படி, வாழ்க்கையில் எதுவுமே



இளவரசர் சார்ள்ஸ்

இவருக்கு நிரந்தரம் கிடையாது. அரச குடும்பத்தில் பிறந்திருந்தாலும், இவரது கடைசி காலம் மிகவும் துன்பமானதாக இருக்கும்.

"சார்ள்சின் வாழ்க்கையில் மிகப் பெரிய முக்கிய மாற்றம், வரும் 1993ஆம் ஆண்டு, புளூட்டோ கிரகத்தினால் ஏற்படும்.

யுரேனஸ், நெப்டியூன் கிரகங்களின் தற்போதை நிலையால்தான், சார்ள்ஸ் – டயானா, ராணி அனைவரும் சேர்ந்து வாழ முடிகிறது" என்கிறார். (ம—10)

# தவளைகள் தப்பி ஓட முடியாது!



அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் வருடா வருடம் தவளைப் பாய்ச்சல் போட்டி நடத்தப்படுவது வழக்கம். குதிரைப் பந்தயம் மற்றும் நாய்ப் பந்தயம் நடத்தப்படுவது போல அமெரிக்காவில் தவளைப் பந்தயமும் கோலாகல

## சுற்றுவாளி...

(23 ஆம பக்கத் தொடர்ச்சி)

னர். 2 மாதம கண்காணித்தும தாகூரை கண்டுபிடிக்க முடியவில்லை. இன்ஸ்பெக்டர் போஸ்லே தலைமையில் தனி பொலீஸ் படை அமைக்கப்பட்டது. இந்த படையில் கராத்தே நிபுணர்களும இருந்தனர்.

ஒரு நாள் காலை 8-45 மணி, பம்பாய் சென்ட்ரல் ரயில் நிலைய பிளாட்பாரத்தில் நெஞ்சில் கூலிங் கிளாஸ் அணிந்திருந்த ஒரு டிப்டாப் ஆசாமி உட்கார்ந்து ஆங்கில நாளிதழ் ஒன்றை படித்துக் கொண்டு இருந்தான்–


அவனை பார்த்த மாத்திரத்தில் பிரபாவுக்கு பொறிதட்டியது. தன்னிடம சங்கிலியை பறித்த போது அவனை அருகில் பார்க்க முடிந்ததால் அவன் உருவம மனதில் பதிந்து இருந்தது.

பொலீஸுக்கு சிக்னல் கொடுத்தார். அடுத்த வினாடி 10 பொலீஸார் தாகூரை வளைத்து விட்டனர்.

ரண்டு நாள் ... விசாரணை நடந்தது. எல்லா திருட்டையும கக்கினான் தாகூர். மாஜிஸ்திரேட் முன்பு அவனை பொலீஸார் ஆஜர்படுத்தினர். வழக்கு விசாரணை துவங்கியது.

எனினும், 4 பெண்களும சாட்சி கூற தைரியமாக முன் வந்தனர். அவர்களது கணவர்கள் சற்று தயங்கினாலும அவர்களை அந்தப் பெண்கள் தைரியப்படுத்தினர். தாகூரை கோர்ட்டில் நேருக்கு நேர் சந்தித்தனர். இந்த 4 பேரின் சாட்சியமே மாஜிஸ்திரேட் ஆதல்யேவுக்கு போதுமானதாக இருந்தது. தாகூர் செய்த வழிப்பறிகள் நிரூபிக்கப்பட்டதால் அவன் தண்டனை விதிப்பதாக அவர் தீர்ப்பு ...

மசளின்...



உறவு கிடையாது. இவர்களிடையே படும்.
உள்ள கருத்து வேற்றுமைகள் முற்றி இருவ ருமே பிரிந்து விடுவார்கள். சார்ள்சின் ஏற்றுக் கொள்ள முடியாத புரட்சிகரமான கருத்துக்களும், உடைந்து போன திருமண

யுரேனஸ், நெப்டியூன் கிரகங்களின் தற்போதை நிலையால்தான், சார்ள்ஸ் — டயானா, ராணி அனைவரும சேர்ந்து வாழ முடிகிறது" என்கிறார். (ம-10)

# தவளைகள் தப்பி ஓட முடியாது!



அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் வருடா வருடம தவளைப் பாய்ச்சல் போட்டி நடத்தப்படுவது வழக்கம். குதிரைப் பந்தயம மற்றும நாய்ப் பந்தயம நடத்தப்படுவது போல் அமெரிக்காவில் தவளைப் பந்தயமும கோலாகலமாக நடத்தப்பட்டு வருகிறது. நாடெங்கும உள்ள தவளைப் பண்ணையாளர்கள் தாம விசேஷ கவனிப்புடன் வளர்த்து வரும புதிய ரக பாய்ச்சல் தவளைகளை இப்பந்தயத்தில் ஈடுபடுத்துகிறார்கள்.

எதிர்வரும மே மாதம பலரும ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும இத்தவளைப் பந்தயம நடைபெறவிருக்கிறது. ஒரு தவளைப் பண்ணையாளர் இம்முறை இப்பந்தயத்தில் வெற்றிபெற்றே தீருவது என்று கங்கணம கட்டிக் கொண்டு விசேஷ ரக தவளைகளை ஆபிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்திருக்கிறார்.

உண்மையில் இவை விசேஷ ரகத் தவளைகள் தாம. ஏனெனில் இவை ஒவ்வொன்றும ஏழு அல்லது எட்டு இறாத்தல் எடை கொண்டவை. பிரமாண்டமான தோற்றம கொண்ட இவை எகிறிப் பாய்ந்தால் ஏனைய தவளைகள் ஆமைகளாகி விடும என்பது உறுதி. இம்முறை இவருக்கு வெற்றி வாய்ப்பு உறுதி என்ற நிலையில் கலிபோர்னிய மாநில வனவியல் துறையினர் பெரும குண்டொன்றைத் தூக்கிப் போட்டு இவரது ஆசையை நிராசையாக்கியுள்ளனர். ஏனெனில் இராட்சத தவளைகளை பந்தயத்தில் ஈடுபடுத்தும நோக்கத்துடன் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்வதை அதிகாரிகள் விரும்பவில்லை.

பந்தயங்களில் ஈடுபடுத்தும நோக்கத்துடன் கொண்டு வரப்படும தவளைகள் சில காலத்தின் பின்னர் அவிழ்த்து விடப்படலாம். அவை காடுகளுக்குச் சென்று இனவிருத்தியில் ஈடுபட்டு அமெரிக்க மண்ணில் தமது இனத்தை பெருக்கலாம. இது பல்வேறு ஜந்துகள் மற்றும மீனினங்களின் அழிவுக்கு வழிவகுத்துவிடும. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இந்த இராட்சத தவளைகள் பல்கிப் பெருகி புதிய தலையிடி ஒன்றை உருவாக்கி விடும என்று அமெரிக்க வனவியல் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

ஒட்டகம, கழுதை, முயல், காட்டுப் பன்றிகள் இவையெல்லாம ஆஸ்திரேலிய மிருகங்கள் அல்ல. காகம மலேசிய பறவையல்ல. ஆனால் இந்நாடுகளில் குடியேறியவர்கள் தமமுடன் இவற்றை எடுத்துச் சென்றனர். இப்போது இந்நாடுகளில் இவை பல்கிப் பெருகி அந்நாட்டு மக்களுக்கு தலையிடியைக் கொடுத்து வருகின்றன. இந்த அடிப்படையில் தான் வேண்டாம இந்த தவளைகள் என்று முன்னெச்சரிக்கையுடன் கதவை மூடுகிறார்கள் அமெரிக்க அதிகாரிகள்! போட்டியில் ஈடுபடுவதிலிருந்து இந்தத் தவளைகள் தப்பி விட்டன. ஆனால் சமையல் அறைகளுக்குத் தப்ப முடியாது. மேல் நாட்டவர்களுக்கு தவளை இறைச்சியில் விருப்பம அதிகம.

(ம-032)


## டுபாய், ஓமான், பஹ்ரெயின் குவைட் நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு
எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

**யசோதா எண்டர்பிரைசஸ்**

ஆட்சேபலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
காலி வீதி கொழும்பு—03.
தொலைபேசி- 502868

(தொழில் அனுமதிப்பத்திர இல 647
அங்கீகார இல. ஏ எல் / 647/ 11/ 89


## சுற்றுவாளி...

(23 ஆம பக்கத் தொடர்ச்சி)

னர். 2 மாதம கண்காணித்தும தாகூரை கண்டுபிடிக்க முடியவில்லை. இன்ஸ்பெக்டர் போஸ்லே தலைமையில் தனி பொலீஸ் படை அமைக்கப்பட்டது. இந்த படையில் கராத்தே நிபுணர்களும இருந்தனர்.

ஒரு நாள் காலை 8-45 மணி. பமபாய் சென்ட்ரல் ரயில் நிலைய பிளாட்பாரத்தில் நெஞ்சில் கூலிங் கிளாஸ் அணிந்திருந்த ஒரு டிப்டாப் ஆசாமி உட்கார்ந்து ஆங்கில நாளிதழ் ஒன்றை படித்துக் கொண்டு இருந்தான்.

அவனை பார்த்த மாத்திரத்தில் பிரபாவுக்கு பொறிதட்டியது. தன்னிடம சங்கிலியை பறித்த போது அவனை அருகில் பார்க்க முடிந்ததால் அவன் உருவம மனதில் பதிந்து இருந்தது.

பொலீஸுக்கு சிக்னல் கொடுத்தார். அடுத்த வினாடி 10 பொலீஸார் தாகூரை வளைத்து விட்டனர்.

இரண்டு நாள் தீவிர விசாரணை நடந்தது. எல்லா திருட்டையும கக்கினான் தாகூர். மாஜிஸ்திரேட் முன்பு அவனை பொலீஸார் ஆஜர்படுத்தினர். வழக்கு விசாரணை துவங்கியது.

எனினும், 4 பெண்களும சாட்சி கூற தைரியமாக முன்வந்தனர். அவர்களது கணவர்கள் சற்ற தயங்கினாலும அவர்களை அந்தப் பெண்கள் தைரியப்படுத்தினர். தாகூரை கோர்ட்டில் நேருக்கு நேர் சந்தித்தனர். இந்த 4 பேரின் சாட்சியமே மாஜிஸ்திரேட் ஆதல்யேவுக்கு போதுமானதாக இருந்தது. தாகூர் செய்த வழிப்பறிகள் நிரூபிக்கப்பட்டதால் ஆயுள் தண்டனை விதிப்பதாக அவர் தீர்ப்பு கூறினார். (ம-10)

## மகளின்...

(22ஆம பக்கத் தொடர்ச்சி)

பெண் பிள்ளையின் மனநிலையை அறிந்து கொள்ள வேண்டும. அதாவது அப்பிள்ளையின் மன நிலை "திருமணம" என்றாலே வெறுக்கும அளவுக்கு இருக்கலாம.

அல்லது வேறு எவரையும நினைத்திருக்கலாம, பெற்றோர் நினைக்கிறார்கள் தங்கள் பிள்ளையை ஓர் உயர்ந்த இடத்தில் மணமுடித்துக் கொடுக்க வேண்டும என்று. இது உண்மை தான்.

ஆனால் வாழப்போவது அந்தப் பெண் தான் அவளின் பூரண சமமதத்தோடு அத்திருமணம நடந்தால் தான் "ஆயிரம காலத்துப் பயிர்" என்பதற்கு அர்த்தம இருக்கின்றது.

பெற்றோருக்கும பிள்ளைக்கும இடையில் எவ்வித முரண்பாடுகளும இல்லாதிருக்க வேண்டும. பெருமபாலான பெற்றோர் தங்களின் கௌரவத்தையே பார்க்கின்றார்கள்

ஆனால் பிற்காலத்தில் அது நம பிள்ளைக்கு எந்தளவிற்கு சாதகமாக அல்லது பாதகமாக இருக்குமென்பதை எண்ணிப் பார்ப்பதேயில்லை.

வாழப்போவது அந்தப் பிள்ளை தான், எனவே "திருமணத்தின் தீர்ப்பு" பிள்ளை கையில் வழக்கை விசாரிப்பது மட்டுமே பெற்றோர் கையில்,

இதற்காக பக்குவாத்தியம போட உறவினர்கள் இடையில் அவசியமற்றவர்களாகின்றார்கள்.

எனவே பெற்றோர்களே உங்கள் பிள்ளையை பாழுங்கிணற்றில் தள்ளுவதும, தள்ளாது விடுவதும உங்கள் கையில் தான்.


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.



**எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.**

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981 –84.



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 4 பெப்ரவரி 1990.

"CHINTAMANI", 5, Gunasena Mawatha, Colombo 12 — P.O. Box 1613.